# 17

# தலைமைத்துவம்



# LEADERSHIP

# 17

## எப்படித் தலைமை வகிக்கக்கூடாது?

HOW NOT TO LEAD

**1**

தலைமையை நாடி அலையக்கூடாது.

**2**

உங்கள் திறமையைச் சார்ந்திருக்கக்கூடாது.

**3**

மக்களை வசப்படுத்திப் பயன்படுத்தக்கூடாது.

**4**

உங்களையே மேம்படுத்திக்கொண்டிருக்கக்கூடாது.

**5**

பாரபட்சம் காட்டக்கூடாது.

**6**

பணத்திற்கு அடிமையாகக்கூடாது.

**7**

தனிக்காட்டு ராஜாவாயிருக்கக்கூடாது.

**8**

எரிந்து சாம்பலாகிவிடக்கூடாது.

**9**

சொந்த வாழ்வைக் கவனியாதுவிடக்கூடாது.

**10**

அடுத்த வரிசையினர் ஆயத்தம் தாமதமாகக்கூடாது.

# 17

# எப்படித் தலைமை வகிக்கக்கூடாது?

## அறிமுகவுரை

■ மார்க்க வட்டாரங்களிலும் பொதுவுலகிலும்
அதிகம் பேசப்படுபவற்றில் ஒன்று தலைமைத்துவம்.
தலைமைத்துவப் பயிற்சி, கருத்தரங்குகள், பாட வகுப்புகள்
போன்றவை ஏராளம்.

இதைக் குறித்து பைபிள் போதிப்பதைக் கவனிப்போம்.
திருமறை ஒரு தலைமைத்துவப் பாடப் புத்தகமன்று; ஆனால்
தலைமைக்குத் தேவையான அத்தனையும் இப்பழம் நூலில் உண்டு.

■ தலைமைத்துவத்தால் பாதிக்கப்படாத பகுதி வாழ்வில் இல்லை —

ஏசா 24:2 ... ஐந்து பகுதிகள்

*மக்களும் குருக்களும்* ... மார்க்க வட்டாரம்
*பணியாளும் அதிகாரியும்* ... பொதுச் சமுதாயம்
*வேலைக்காரியும் தலைவியும்* ... இல்லச் சூழல்
*வாங்குபவனும் விற்பவனும்*
*கடனாளியும் முதலாளியும்* ... வர்த்தகவுலகு
*கடன்காரனும் வட்டிக்காரனும்* ... வங்கித்துறை

அதாவது, எந்த உறவானாலும் ''முன் நடத்துபவர்,''
''பின் செல்லுபவர்'' என்று இருக்கத்தான் செய்யும்.

■ தலைமை பற்றிப் பேசுகையில், இயேசுவானவர் எப்படித்
தலைமை வகிக்கக்**கூடாது** என்று குறிப்பிட்டார் —

மத் 20:25,26 ... *புறவினத்தார் ... அப்படி கூடாது*

அப்படியே அப்போஸ்தலன் பேதுருவும் —

1 பேது 5:2,3 ... *அல்ல ... அல்ல ... அல்ல ...*

■ தலைசிறந்ததொரு தலைவனாகிய அப்போஸ்தலன் பவுல் தலைவரது தகுதிகளென 3 பட்டியல்கள் தந்துள்ளான் —

1 தீமோ 3:1-7 ... 9 நற்குணங்கள், 6 தீயவை
3:8-12 ... 5 நற்குணங்கள், 3 தீயவை
தீத் 1:7-9 ... 8 நற்குணங்கள், 5 தீயவை

அதாவது, தலைவன் எப்படி இருக்க ''வேண்டும்'' என்று மட்டுமல்ல, அவன் எப்படி இருக்கக் ''கூடாது'' என்றும்!

■ தலைமை: சிலாக்கியம் அத்துடன் பொறுப்பு.
இவ்விரு அம்சங்களும் சமநிலைப்படுத்தப்படாவிடில் குழப்பமும் சீர்கேடும்தான்.

■ தலைவன் = எங்கே போகிறான் என அறிந்தவன்;
மக்களை அங்கு எடுத்துச் செல்லத் தெரிந்தவன்.

இக்கண்ணோட்டத்தில்,
ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு தலைவனே —
1 பேது 2:5,9 ... *ராஜாக்கள் ... ஆசாரியர்கள்*

■ பக்தியுள்ள தலைவர் பக்தியுள்ளோரைப் பிறப்பிப்பர்;
சீர்கெட்ட தலைவரோ மக்களைச் சீர்குலைப்பர் (செப் 3:1-4).

## எப்படித் தலைமை வகிக்கக்கூடாது?

### 1. தலைமையை நாடி அலையக்கூடாது.
Do not lust for leadership.

■ தங்கள் அழைப்பில் வெற்றியாயிருந்த பல தலைவரின் சரிதைகள், சுயசரிதைகள் பைபிளில் உண்டு.

அவர்களில் எவருமே தலைமையை ''இச்சிக்கவில்லை''—

☐ மோசே (யாத் 3:10,11) ... *நான் எம்மாத்திரம்?* ...

☐ கிதியோன் (நியா 6:15,16) ... *எளியது* ... *சிறியவன்* ...

☐ தாவீது (1 சாமு 16:1,13)
அபிஷேகிக்கப்பட்ட பின்னரும் ஆடு மேய்க்கச் சென்றான்!
வச 19;17:20அ ... ஆடுகளின் நடுவிலிருந்தே கோலியாத்தை
எதிர்கொள்ள வந்தான்!

☐ எரேமியா (எரே 1:5-7) ... *பேச அறியேன்* ... *சிறு பிள்ளை* ...

☐ அதிவுன்னத எடுத்துக்காட்டு இயேசுவே —
கடவுளுக்குச் சமமாயிருப்பதைப் *''பிடித்துக்கொள்ள''*
வேண்டியதாய் அவர் கருதவில்லை (பிலி 2:6)

ஆம், தலைமைக்கு முதல் தகுதியின்மையே அதை நாடியலைவதே
— முக்கியமாக சபைகளிலும் ஊழியங்களிலும்

தலைமையை இச்சிப்பது பெரும்பாலும்
போட்டிக்கும் திருக்குமுருக்குக்குமே நடத்தும்.

பேராயர் மற்றும் சபை ஆட்சிக்குழுவிற்கான தேர்தல்களில்
இதைத்தானே பார்க்கிறோம்!

இது திருமறைக்கு முற்றும் முரணானது.

- அப்படியானால் 1 தீமோ 3:1இன் பொருளென்ன?

  ... *கண்காணியாக விரும்புகிறவன்* ...

  இது ''இச்சை'' அல்ல, ''விருப்பம்!''

  இச்சை என்பது சுயநலம்; அது தற்பெருமைக்குத் தீனி;

  இங்கு வரும் *''விருப்பம்''* என்பதோ ''சேவை'' (நல்ல வேலை)

  செய்ய வாஞ்சை!

- தலைமைக்கான எலிப்பந்தயம் புதிதன்று —

  இயேசுவின் நெருங்கிய சீடரிடமே அது இருந்தது:

  இரு தடவை இயேசு அவர்களைக் கடிந்து திருத்தினார்:

  மாற் 9:33-35 ... *சாலையில் ஏற்பட்ட விவாதம்* ...

  *''பேசாதிருந்தனர்''* ... அதிகார வெறியை

  மறைக்க முயன்றனர்.

  அடுத்த அத்தியாயத்திலேயே —

  மாற் 10:35-38 ... *வலது* ... *இடது* ... *ஆசனங்கள்*

  கிரயத்தைக் கணக்கிடாத விபரீத விருப்பம்!

- கிரயத்தைக் கணக்கிட்டாலும்,

  தலைமையை நியமிப்பது **தேவனே** (வச 40)

  சபையோ, நாடோ,

  தலைவர்களை அதிகாரத்தில் நியமிப்பவர் தேவனே.

  சபை: அப் 20:28 ... *ஆவியானவர் கண்காணிகளாய் வைத்த* ...

  நாடு: ரோ 13:1 ... *தேவனேயன்றி ஒரு அதிகாரமுமில்லை*

  அதையும் இதையும் செய்து நாம் தலைவர்களை ஏற்படுத்தலாம்;

  ஆனால் கடவுள் அதை அங்கீகரிக்கமாட்டாரே —

  ஓசி 8:4 ... *ராஜாக்களை ஏற்படுத்தினர்* ... *என்னால் அல்ல*

- உண்மையாகவே மக்களைச் சேவித்து ஆசீர்வதிக்க விரும்புவோர்

  ஒருபோதும் தலைமைப்பதவியை இச்சியார்:

  ஓர் உவமை: நியா 9:7-15

ஒலிவ மரம்—எண்ணெய்; அத்தி—பழம்; திராட்சை—ரசம்:

அனைத்தும் மக்களுக்கான ''சேவை''

முட்செடி: அதிகார மோகம் —

*''என் நிழலுக்கு **அடியில்** வாருங்கள்''*

முட்செடிக்கு நிழல் ஏது?

வராவிட்டால் *''அக்கினி!''* (பயமுறுத்தல்)

பதவி வெறியர் சிறந்த தலைவராவதில்லை.

எப்படியாவது அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதே

எச்சூழலிலும் அவர்களது துடிப்பு.

■ தலைமையை இச்சிப்பதற்குப் பதிலாக,

தலைவர்களுக்கு ''உதவியாளராய்'' இருப்போமே!

— வரங்கள் பட்டியலில் *''ஆளுகைக்கு''* முன் *''உதவிகள்''*
வருகின்றன 1 கொரி 12:28

— *''கொடுத்தலுக்கும் இரக்கத்திற்கும்''* இடையேதான் *''தலைமை''*
ரோ 12:8

எடுத்துக்காட்டுகள் —

☐ யோசுவா

யாத் 24:13 ... மோசேக்கு *''உதவி ஊழியன்''*

எண் 27:18 ... *யோசுவாவை நியமித்திடு!*

☐ எலிசா

1 இரா 19:19-21 ... *எலியாவுக்குப் ''பணிவிடை'' செய்தவன்*

2 இரா 3:11ஆ ... எலியாவின் கைகளுக்குத் *''தண்ணீர் வார்த்தவன்''*

2:12 ... ''மகன்'' போல எலியாவைச் சேவித்தவன் ...

*''என் தகப்பனே ... என் தகப்பனே!''*

☐ தாவீது

1 சாமு 18:5 ... சவுல் அனுப்பிய இடமெங்கும் சென்றான்;

சவுல் அவனைச் சேவகருக்கு அதிகாரியாக்கினான்.

□ தீமோத்தேயு

பிலி 2:22 ... *''மகன்'' போலப்* பவுலுக்கு உதவினான்.

வாக்கு: உதவி ஊழியம் செய்வோர் உயர்நிலையடைவர் —
1 தீமோ 3:13

ஆனால் கடவுளின் வேளைக்காய்க் காத்திருங்கள் —
1 பேது 5:5அ ... *மூப்பருக்கு இளைஞர் அடங்கி ...*
:6 ... *ஏற்றவேளையில் உயர்த்துவார்*

■ இன்றைய நிலை:

தலைவர்களுக்குப் பஞ்சமில்லை; உதவியாளரோ கொஞ்சம்.
உயர்த்தப்படக் கடவுளது வேளைக்காய் உதவியாளர்கள் காத்திருக்க முடியாவிடில், எல்லாப் பிரச்னைகளும் உருவாகும்.
சபையில் அவர்கள் குழப்பக்காரராய் மாறுவர்.
உதவி மேய்ப்பர்களால் எத்தனை சபைகள் உடைந்துள்ளன!

அவர்கள் பக்தியுள்ள ஆலோசனையைக் கேட்கமாட்டார் —
(உ-ம்) தியோத்திரேப்பு (3 யோ 9,10)

தலைவர்களை உதவியாளர்கள் விட்டுவிலகும்போது,
அவர்கள் இன்னொரு சபை நிறுவ முயற்சிப்பர்;
ஆகிலும் அவர்களில் பலர் சித்திபெறுவதில்லை.

விளைவு? ''மேய்ப்பனில்லா ஆடுகள்'' என்றில்லாது
''ஆடுகளில்லா மேய்ப்பர்'' என்றாகிவிடும்!
அதைத் தொடர்வது ''ஆடு திருட்டு!''

■ ''சிலாக்கியம்'' என்பதைவிடத் தலைமை ஒரு ''பொறுப்பு!''
தலைவர்கள் மீது பொறாமை அல்ல, பரிதாபம் கொள்ளுங்கள்!
அமெரிக்காவில் வாரந்தோறும் 1500 ஊழியர் விலகுகின்றனராம்.

■ தலைமையை இச்சிக்காதீர்;
அதே வேளையில் தேவன் அழைத்தாலோ தாழ்மையாய் ஏற்பீர் —
மோசே: யாத் 4:13, 14அ ... *கர்த்தரின் கோபம்*

**2. உங்கள் திறமையைச் சார்ந்திருக்கக்கூடாது.**
Do not rely on your skill.

- வளர்த்தி, தாலந்து, கல்வி, பயிற்சி, தோற்றம், அனுபவம் —
  இவையெல்லாம் ஒரு தலைவனுக்குச் சாதகமானவையே.

  ஆனாலும், முழுக்க முழுக்கக் கடவுளைச் சாராது
  இவைமீது சார்ந்திருந்தால் அவன் சித்திபெற மாட்டான்.

- கடவுளே எல்லாவற்றிற்கும் மேலான தலைவர் என்பதை
  தலைவன் எவனும் கட்டாயம் அறிந்திருக்கவேண்டும் —

  - ☐ கொலோ 1:15-17 ... *படைப்பு அனைத்திற்கும்மேல் ...*
    *அவர் மூலம் ... அவருக்காய் ... அவருக்குள் ...*
  - ☐ எரே 5:30,31 ... *திகைப்பும் திகிலும் ... தாங்களாகவே ஆளுகை*
  - ☐ தானி 4:17அ ... *உன்னதமானவர் ஆளுகை ...*
  - ☐ மன்னன் நேபுகாத்நேச்சாருக்கு இதைப் புரிய வைக்கவே
    அவன் ஒரு மிருகம்போலாகத் துரத்தப்பட்டான் —
    தானி 5:21
  - ☐ எவரும் விரும்பும் சங்கீதம் இச்சத்தியத்தை அடக்கியுள்ளது —
    சங் 103:19 ... *அவரது அரசு அனைத்தையும் ஆளுகிறது*
  - ☐ இதனால்தான் இயேசுவானவர் *ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தர்*
    எனப்படுகிறார் —
    வெளி 19:16 ... *அவரது தொடைமீது ...*
    அதாவது, தலைவர்களுக்குத் தலைவர்!
  - ☐ கிதியோனின் இதயத்தை இச்சத்தியம் நிரப்பியிருந்தது —
    நியா 8:22,23 ... *நான் உங்களை ஆளமாட்டேன் ...*
    *கர்த்தரே ஆளுவார்*

    அவனுக்கு வந்த அழைப்போ:
    *நீரும், உமது குமாரனும், உமது பேரனும் எங்களை ஆளுங்கள்.*

☐ முடிவான தலைவராய்க் கடவுளின் அதிகாரம் ஓர் உபதேசமாய்ப் புதிய ஏற்பாட்டில் பவுலால் தரப்பட்டுள்ளது: ரோ 13:1,2

— இரட்டை அழுத்தம்: *கடவுளால்* ***அன்றி*** *ஒரு அதிகாரமுமில்லை;*
***எல்லா*** *அதிகாரமும் அவரால்தான்.*

☐ மோசேயும் ஆரோனும் இறைமக்களின் தலைவர்களாயிருந்தாலும் அவர்களுக்கு மேலான இயக்குநர் கடவுளே!
*''மோசே, ஆரோன் ... கைகளால் நடத்தினீர்''* (சங் 77:20)

☐ இயேசு எல்லாவற்றிற்கும் பிதாவையே சார்ந்திருந்தார்.
(உ-ம்) யோ 4:34; 5:30; 5:32,37; 6:37,44; 6:57

■ தலைவர்கள் சார்ந்துவிடக்கூடிய சில காரியங்கள் —

☐ உடல் தோற்றம் —
தீர்க்கன் சாமுவேல்கூட இங்கு தவறிவிட இருந்தான் —
1 சாமு 16:6,7 ... *எலியாப் ... ஈசாயின் மூத்த குமாரன்*

☐ கல்வியறிவும் பயிற்சியும் —
எகிப்தில் மோசேக்குக் கிடைத்த கல்வி, பயிற்சி
அப் 7:22 ... *எகிப்தின் ''அனைத்துக்'' கலைகள் ...*
*சொல்லிலும் செயலிலும் வல்லவன் ...*

அவனது வாழ்வில் 3 நிலைகள்:
முதல் 40 ஆண்டுகள் — தான் முக்கியமானவன் என்றெண்ணினான்
(வச 23) (எகிப்தியனைக் கொன்றான்)
அடுத்த 40 ஆண்டுகள் — தான் ஒன்றுமில்லை என்றறிந்தான் (வச 30)
கடைசி 40 ஆண்டுகள் — தேவனே எல்லாம் என்றுணர்ந்தான் (வச 36)

மக்கள் புறக்கணித்தனர்;
தேவனோ அவனைத் *''தலைவனாய்''* அனுப்பினார்!

கடவுள் அவனை நிரப்புமுன் அவனை வெறுமையாக்கினார்!

வெறும் கல்வி உங்கள் தலையைத்தான் நிரப்பும்;
இதயத்திலோ உருப்படியாய் ஒன்றுமிராது.
அதாவது, கனத்த தலை, காலி இதயம்.

☐ பின்னணியும் அனுபவமும் —

நமது பின்னணியைக் கடவுள் பயன்படுத்தலாம்;
ஆனால் அதனைச் சார்ந்திடமுடியாது.

எனது சாட்சி:

மாணவப் பருவத்தில் பல தலைமைப் பொறுப்புகள் கொண்டிருந்தேன் —

வகுப்புத் தலைவன், NCCஇல் ஆணைப் பதவி,
ஜெபக்குழுத் தலைவன், போன்றவை.

தேவன் என்னை ஓர் இயக்கத்தின் முதல் தலைவனாக்கியபோதோ,
கற்ற பல களையவும், புதிதாய்ப் பல கற்கவும் வேண்டியிருந்தது.

☐ வயது —

எலிகூ என்றோர் இளைஞனின் வார்த்தைகள் :
யோபு 32:9,8 ... *பெரியோரெல்லாம் ஞானிகளல்ல ...*
*சர்வ வல்லவரே ஞானம் அருளுகிறார் ...*

☐ நிறுவனத்தின் பலம் —

புகழ்பெற்ற நிறுவனங்களுக்காய்க் கடவுளைத் துதிப்போம்;
நமது தலைமைத்துவ அழைப்பை நிறைவேற்றவோ அவற்றைச் சார்ந்திருக்கமுடியாது.

தலைவர்களுக்கு நல்ல அலுவலக அறை வேண்டும்;
ஆனால் அறைகளின் விரிவும் நவீன வசதிகளும்
அவர்களைச் செருக்குள்ளவராக்கிவிடக்கூடாது.

திருவசனத்திலிருந்து ஒரு சவால் —

எரே 22:13,14,15அ ... *பலகைகள் ... வர்ணம் ... ராஜாவாய்*

எது முக்கியம் தெரியுமா? —

அறையின் அகலமல்ல; அகத்தின் விசாலம்!
மேசையின் விலையல்ல; வேதத்தில் விருப்பம்!

☐ முக்கிய புள்ளிகளின் அறிமுகம் —

தேவ தயவுடன் மனிதர் தயவையும் அனுபவிப்பது பேராசீர்வாதம்;
ஆனால் பெரும் புள்ளிகளையே சார்ந்திருப்பது ஆபத்து.

(உ-ம்) மன்னன் ஆசா (2 நாளா 16:7-9)

எத்தனையோ வெற்றிகளைத் தந்திருந்த கர்த்தரைச் சாராது

சீரியா மன்னனைச் சார்ந்துவிட்டான் (வச 7)

கடவுள் அதை *''மதியீனம்''* என்றார் (வச 9)

செல்வாக்குள்ள ஒருவரைக் குறிப்பிட்டு,

''அவர் எனக்கு வலதுகை'' என மார்தட்டலாம்!

திருமறையோ நாம் நமது நம்பிக்கையைக்

**கர்த்தரின்** ''வலது கரத்தின்மீதே'' வைக்க அழைக்கிறது —

சங் 118:15ஆ,16 ... *''வலது கரம்''* (மும்முறை)

அதே சங்கீதத்தில் இச்சத்தியம் தெளிவு —

சங் 118:8,9 ... *''மனிதனையும் பிரபுக்களையும்''*

*நம்புவதைவிடக் கர்த்தர்மீது நம்பிக்கை வைப்பதே மேல்.*

■ மேற்கூறிய சாதகங்களைப் பெற்றிருத்தல் தவறன்று;

ஆனால் அவற்றின்மீது சார்ந்துவிடக்கூடாது.

கீழ்வரும் எடுத்துக்காட்டுகள் இதை நன்கு விளக்குகின்றன —

□ செருபாபேல் — பாபிலோனியரால் அழிக்கப்பட்ட ஆலயத்தைத்

திரும்பக்கட்டும் பெரிய வேலை

அவன் ஒரு தலைவன் — *''யூதாவின் கவர்னர்''* (ஆகாய் 1:1)

ஆனால் அவனுக்கு வந்த திருவார்த்தை: சக 4:6-10

*''பலம் ... பராக்கிரமம் ... அல்ல ... என் ஆவியினாலேயே''*

*''பலம்''* அல்லது *''பராக்கிரமம்''* = ஆள் பலம், புய பலம்,

பண பலம், தொழில் நுட்பம், முதலியன

☐ நெகேமியா — எருசலேமின் மதில்களைத் திரும்பக் கட்டும் பிரமாண்டமான வேலை

அவன் தேவனை முழுமையாய்ச் சார்ந்திருந்தான்; உடன் பணியாளரையும் அவ்விதம் சார்ந்திருக்கச் செய்தான்; இதனால்தான் அவனது சத்துருக்களும் இவ்விதம் அறிக்கையிட்டனர் —

*''இந்த வேலை* ***தேவனால்*** *கைகூடி வந்தது!''* (நெகே 6:16)

- எனவேதான், ஆதிச்சபையில் பந்தி பரிமாறுவோரும் *''ஆவியால் நிறைந்தவர்களாய்''* இருக்க வேண்டியதிருந்தது (அப் 6:3)
- உங்களுக்குத் திறமையோ தாலந்தோ இல்லாதிருக்கலாம்; ஆனால் நீங்கள் கடவுள்மீது சார்ந்திருந்தால் இதோவொரு வாக்கு:

ஏசா 41:14,15 ... *யாக்கோபு ...பூச்சி ... கூரிய ஆயுதம்*

**எப்படித் தலைமை வகிக்கக்கூடாது?**

## 3. மக்களை வசப்படுத்திப் பயன்படுத்தக்கூடாது.

Do not exploit people.

■ தமது மக்களின் மேய்ப்பர்மீது கடவுளின் தீராத அதிருப்தி —

எசேக் 34:2,3 ... ஆடுகளின் கொழுப்பினாலும் கம்பளத்தினாலும்
தாங்களே பயனடைந்துகொண்டனர்.

ஆடுகளைப் *''போஷிப்பதற்குப்''* பதிலாக,
தங்களையே ஆடுகளால் *''போஷித்தனர்!''*

தலைவர்கள் மக்களைக் கசக்கிப் பிழியாது,
அவர்களுக்குத் திறனளிக்கவேண்டும் ...
அவர்களைப் பலப்படுத்தவேண்டும் ...
அவர்களைப் பயிற்றுவிக்கவேண்டும் ...
அவர்களை ஊக்குவிக்கவேண்டும்.

■ இப்படித்தான் இயேசுவானவர் தலைமைக்கு மாதிரியானார் —

யோ 10:11 ... *நல்ல மேய்ப்பன் தன்* ***''உயிரைக்''*** *கொடுக்கிறான்.*
*''உயிர்''* = மக்களுக்கு நன்மை பயக்க எதையும்
தியாகம் செய்ய ஆயத்தம்

■ தலைவர்களில் நல்லவர், தீயவர் எனப் பல
வேத எடுத்துக்காட்டுகளிலிருந்து நாம் ஏராளம் கற்கலாம்.

□ மக்களுக்காய் மோசே பரலோகையும் இழக்க ஆயத்தம் —
யாத் 32:32 ... *''அவர்களை மன்னியும்,*
*இல்லையேல் என்னை மறந்திடும்!''*
அவனுக்குக் கடவுள் ''நன்மையை'' வாக்களித்திருந்தாலும்:
வச 10 ... *''உன்னைப் பெரிய இனமாக்குவேன்!''*

□ யோசேப்பு
பார்வோன் ஒரு கருணையற்ற தலைவன் —
வைக்கோல் கொடுக்காமலே இஸ்ரவேலரைச்
செங்கல் சுடச் சொன்னவனல்லவா?
(யாத் 5:15-19)

செழிப்பான ஆண்டுகளில் தானியம் சேர்க்கவும், பஞ்ச காலத்தில் வினியோகிக்கவும், யோசேப்பைப் பார்வோன் அதிகாரியாக்கினான். எகிப்தின் நிலங்களையெல்லாம் பார்வோனுக்கு யோசேப்பு வாங்கினான். அவனது இரக்கக் குணத்தைப் பாருங்கள்:

அறுவடையில், 20 சதவீதம்தான் பார்வோனுக்கு ...
80 சதவீதம் மக்களுக்கே! (ஆதி 47:23,24)

☐ தாவீது

சிறுவயது முதல் அவனுக்கு மேய்ப்பனுள்ளம் இருந்தது — இல்லையேல் ஓர் ஆட்டுக்குட்டியைக் காப்பாற்ற எவராவது சிங்கம், கரடியுடன் சண்டையிடுவாரா? (1 சாமு 17:34-36)

எனவேதான் கடவுள் அவனை இஸ்ரவேலில் தலைசிறந்த அரசனாக்கினார்:

2 சாமு 7:8 ... *ஆட்டுமந்தையின்பின் ... அதிபதி!*

தாவீது தனது உடனாளிகளுக்காய் உயிர்விடவும் ஆயத்தம்;
எனவே அவர்களும் அவனுக்காய் உயிர்கொடுக்கவும் ஆயத்தம்!
மக்கள் சொன்னதைக் கவனியுங்கள் —

*''நாங்கள் உமது எலும்பும் சதையுமானவர்கள்!''* (2 சாமு 5:1)
அரியணையில் சவுல் இருக்கும்போதே,
தாவீதின் இதயத்தை மக்கள் புரிந்திருந்தனர்! (வச 2)

ஒரு முறை பெத்லகேமின் கிணற்று நீருக்காய் அவன் ஏங்கினான்
2 சாமு 23:15-17 ... *அது அவர்களது ''இரத்தம்!''*
ஆம், பக்தியுள்ள தலைவன் தனது மக்களின்
தியாகக் கீழ்ப்படிதலைச் சாதகமாக்க மாட்டான்.

☐ நெகேமியா

நெகே 5:14,15 ... யூதாவில் 12 ஆண்டுகள் கவர்னர்.
முன்னிருந்த அதிபதிகள் போல் அல்லாது,
தனது நியாயமான சலுகைகளையும் ஏற்க மறுத்தான்.
ஏன்? ''மக்களது'' நிலையைப் பார்த்து!

☐ இந்தியா எத்தனையோ ஜனாதிபதிகளைப் பார்த்துவிட்டது; ''மக்களின்'' ஜனாதிபதி என்றழைக்கப்படுவதோ **அப்துல் கலாம்** ஒருவரே. அவர் அப்பதவியை நாடவில்லை;
அப்பதவியே அவரை நாடிற்று.

☐ அதுபோலவே, அமெரிக்காவில் பல ஜனாதிபதிகள் இருந்ததுண்டு; அதிகமாய் நினைவிலிருப்பவரோ **ஆபிரகாம் லிங்கன்**தான்.

அவரது கோஷம்:

**மக்களுடைய** அரசு ...
**மக்களுக்கான** அரசு ...
**மக்களால்** அரசு.

A Government "**of**" the people;
"**for**" the people.
"**by**" the people.

☐ அலெக்சாண்டருக்கு ''மாபெரும்'' எனும் பட்டம் இப்படியே கிடைத்தது — தனது உடன் சேவகரோடு சாப்பிட்டார்;
அவர்களைப் பெயர் சொல்லி அழைத்தார்;
அவர்களோடு போர் முனைக்கு நடந்தார்.
மக்களை நசுக்கவில்லை, நேசித்தார்!

☐ இயேசு —
அவரது நாட்களில் கற்பனைகள், சட்டங்கள் என்ற பெயரில்
மக்களை மார்க்கத் தலைவர்கள் ஏமாற்றி வந்தனர்.

அதைக் கண்டனம்பண்ணிய இயேசு சொன்னது — (மாற் 2:27)
*''மனிதனுக்காகவே ஓய்வுநாள்; ஓய்வுநாளுக்காய் மனிதனல்ல!''*

அமைப்புகள், முறைகள், இவற்றைவிட மக்களே முக்கியம்.

நான் இயக்கத்தின் தலைவனாயிருந்த காலத்தில் வலியுறுத்தியது:
''ஊழியத்தைவிட ஊழியனே முக்கியம்!''

☐ மக்களைச் ''சாதகமாக்காத'' புதிய ஏற்பாட்டுத் தலைவரில் மேலோங்கி நிற்பது **அப்போஸ்தலன் பவுலே** —
— 1 தெச 2:7,8 ... *பால் கொடுக்கும்* ***தாய்****போல*
*எங்களையே உங்களுக்காய் ஊற்றி* ...

— 1 தெச 2:11,12 ... ***தகப்பன்*** *புத்திசொல்லித் தேற்றுவதுபோல்...*
எந்தத் ''தாய் தந்தை'' பிள்ளைகளை வஞ்சிப்பார்கள்?

— 2 கொரி 1:24 ... *விசுவாசிகள்மீது ஆதிக்கம் செலுத்தாமல்*
*அவர்கள் மகிழ்ச்சியாயிருக்க உதவி*

— 2 கொரி 7:2 ... *''வஞ்சிக்கவில்லை''* = சாதகமாய்ப்
பயன்படுத்தவில்லை

— 2 கொரி 13:10 ... கடவுள் தந்த அதிகாரம் உங்களை
*ஊன்றக் கட்ட, உடைக்க அல்ல*

ஆம், தலைவனது கடமை —

மக்களை உடைக்கலாகாது, உருவாக்கணும்
மக்களை அணைத்துவிடலாகாது, அனலூட்டணும்
மக்களைத் தொய்வுறச் செய்யலாகாது, தெம்புறச் செய்யணும்
மக்களைப் பகடிபண்ணலாகாது, படிப்பிக்கணும்
மக்களைத் தாக்கலாகாது, தாங்கணும்

இப்படிப்பட்ட தலைவனையே மக்கள் *''நம்புவர்''*
மத் 12:20,21

தனி நபர்களை அப்போஸ்தலன் பவுல் மதித்தான் —

ரோமர் 16இல் 27 பெயர்களைக் குறிப்பிடுகிறான்.
கொலோசேயர் 4இல் 10 பெயர்களைக் குறிப்பிடுகிறான்.

இயேசு சொன்னது இதுதான் —
*''எனக்கு என் ஆடுகள் தெரியும்; அவைகளுக்கு என்னைத் தெரியும்!''*
(யோ 10:15)

அலுவலகப் பாணியல்ல, சகோதர பாசம்!

■ மன்னன் ரெகொபெயாம் ஒரு தீய எடுத்துக்காட்டு —

1 இரா 12:6 ... தனது தந்தை சாலொமோனைத் தெரிந்த
முதியோருடன் ஆலோசித்தான்.

:7 ... *நீர் மக்களைச் சேவித்தால்,*
*அவர்கள் உம்மைச் சேவிப்பர்!*

:10இ ... *என் சுண்டுவிரல் என் தந்தையின்*
*இடுப்பைவிடப் பருமனாயிருக்கும்!*

நடந்ததென்ன? ராஜ்யம் பிரிந்தது!

மீதி சரித்திரம் சோகமே!

தலைமையில் தவறியதே அனைத்துக்கும் காரணம்.

- ஒரு கேள்வி:

  மந்தையை மேய்க்கிறவன் அதின் பாலைக் குடிக்கக்கூடாதோ? (1 கொரி 9:7ஆ). குடிக்கலாம்; ஆனால் கறந்துகொண்டேயிருந்தால் இரத்தம் வந்துவிடும், கவனம்!

- முடிவாக ஓர் அறிவுரை:

  நீங்கள் ஒரு தலைவனோ, தலைவியோ,
  நெருங்கிப் பணியாற்றுவோரோடு பாலினத் தொடர்பு ஏற்படாது பார்த்துக்கொள்ளவேண்டும் — 1 தெச 4:3-6

  இது தொழிலகம், தொழுகையகம் இரண்டுக்கும் பொருந்தும்.

- சார்ல்ஸ் வெஸ்லி (1707-1788) இயற்றிய பாடல்:

  *அகலமாக்கும், அனலூட்டும், ஆட்கொள்ளும்,*
  *என் இதயத்தை அளக்கமுடியா உமதன்பினால்;*
  *ஆடுகளை என்னைப்போல் நேசித்து,*
  *காப்பாற்றி, உம்மைப்போல் தேற்றி,*
  *ஜீவனீந்த மேய்ப்பனே, வழுவாது நடத்தி,*
  *திறந்த உம் விலாவண்டை கொணர உதவிடும்.*

## 4. உங்களையே மேம்படுத்திக்கொண்டிருக்கக்கூடாது.
Do not promote yourself.

■ நம்மை நாமே உயர்த்திக்கொள்வதற்கு எதிராக
எரேமியாவில் ஒரு சவாலுண்டு —
எரே 45:5அ ... *உனக்குப் பெரிய காரியங்களைத் தேடுகிறாயோ?*

தீர்க்கன் எரேமியாவிற்கு எழுத்தனான பாரூக் என்பவனுக்குச் சொல்லப்பட்ட வார்த்தைகள் இவை.

இவன் எழுதியதே மன்னனுக்கு மன்னனது ஆலோசகர்களால் எடுத்துச் செல்லப்பட்டதால் இவன் செல்வாக்குள்ளவன்!

■ ராஜாக்களின் **தகுதியாய்க்** குறிக்கப்பட்டது இதுவே —
உபா 17:18 ... *சகோதரர்க்குமேல் தன்னை உயர்த்தாமல் ...*

■ **பெருமையே** சுயவுயர்வின் உபாயங்களைப் பிறப்பிக்கிறது —
இயேசு: தலைமைத்துவத்தின் பிரதான நிபந்தனை — தாழ்மை
மத் 20:25-28 ... *தொண்டன் ... பணியாளன் ...*
இது புறவினத்தாரின் முறை **அன்று!**

மாதிரியை வைத்துப் போகிறேன் என்று இயேசு சொன்ன ஒரே காரியம் ''பாதங்கழுவுதல்'' —
யோ 13:13-15

ஒரு மேடைமீது நின்றுகொண்டு
கீழே இருப்பவரின் பாதங்களைக் கழுவமுடியாது!

☐ நமது ராஜா இயேசு இவ்வுலக அதிபதிகள் போலல்லாது *''சாந்தமும் தாழ்மையும்''* உள்ளவர் —
மத் 21:4

☐ எந்தத் தலைவனையும் கீழிறக்குவது அகந்தையே —
எசேக் 28:17

— உசியா ராஜா (2 நாளா 26:16அ, 21அ — தொழுநோய்)
துவக்கத்தில் தாழ்மையாகவே இருந்தான்.
— நேபுகாத்நேச்சார் கடினப்பாதையிலேயே அதைக் கற்றான்
தானி 4:37 ... *அகந்தை ... தாழ்த்த* ...

☐ இங்குதான் தாவீதரசன் மேலோங்கினான்!
தனது கடைக்காலம் வரை தாழ்மையாகவே இருந்தான்
2 சாமு 7:18 ... *நான் எம்மாத்திரம்?*
துவக்க காலத்தில் இப்படிச் சொல்வது எளிது!!!

தாவீது எவ்விதம் இறுதிவரை தாழ்மையாகவே இருக்க முடிந்தது?

தனது ''சாமர்த்தியம்'' அல்ல, கடவுளது ''காருண்யமே''
தன்னைப் பெரியவனாக்கிற்று என்று எப்பொழுதும் நினைத்தான்!
2 சாமு 22:36ஆ

■ தன்னைத்தான் உயர்த்திக்கொள்ளும் தலைவனின் குணங்களைப் பார்த்து, அவற்றைத் தவிர்ப்போம் —

☐ அவன் மக்களிடம் கடுமையாய் இருப்பான்.
கொடூரம் திருச்சட்டத்தில் கண்டிக்கப்பட்டுள்ளது (லேவி 25:43,46)
சங் 45:1,2 ... ராஜன் இயேசு பற்றிய தீர்க்கதரிசனம்:
*''அவரது உதடுகளில் அருள் பொழிகிறது''*
அவரது அழகு பற்றிய பட்டியலில் முதலானது இதுவே!

அவரது *''கிருபையுள்ள''* வார்த்தைகள் மக்களுக்கு வியப்பு
லூக் 4:22

அரசனுக்கு அடுத்த இடத்திலிருந்தாலும் மொர்தெகாய்
*மக்களிடம் ''கனிவாய்ப்'' பேசினான்* —
எஸ்தர் 10:3

☐ அவன் எதற்கெடுத்தாலும் சட்டம் சட்டம் என்பான்.
தலைவன் எவனும் கண்டிப்பாயிருக்கவேண்டும்;
''இரக்கம், கருணையையோ''விட்டுவிடக்கூடாது —
நீதி 20:28; ஏசா 16:5 ... *கிருபையினால் சிங்காசனம்* ...

இப்பாடத்தை விளக்கும் ஒரு பாடம்:

யாத் 25:21 ... *''பிரமாணம்''* உடன்படிக்கைப் பெட்டியின் உள்ளே; *''கிருபாசனமோ''* ***அதற்குமேல்!***

☐ அவன் தனது விருப்பப்படியே ஆளுவான் (ஏகாதிபதி/Autocrat).

பிறரிடம் கலந்தாலோசித்து அவர்கள் கருத்துக்களைக் கேட்டறிவதைக் கவுரவக் குறைவாய் எண்ணுவான்.

இஸ்ரவேலில் எத்தனையோ சிறந்த அரசர் இருந்தனர்;
இயேசுவோ ***''தாவீதின்''*** *குமாரன்* என்றே அழைக்கப்பட்டார்.

சிறந்த போர் வீரனாகிய இவனும் பிறரோடு கலந்தாலோசித்தான் —
1 நாளா 13:1-3 ... *எல்லா அதிபதிகளோடும்* ...
''உடன்படிக்கைப் பெட்டியைத் திரும்பக் கொணர''
— கேள்விக்குரியதல்ல, நல்ல காரியந்தானே என்றாலும்!

பிறரோடு கலந்தாலோசிப்பதே பாதுகாப்பு என்பதை நீதிமொழிகள் திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டுகிறது —
நீதி 12:15; 13:10; 15:22; 19:20; 24:6

ஏகாதிபதியானவன் பிறரிடமிருந்து கற்க விரும்பான்.
— ''எல்லாம் எனக்குத் தெரியும்'' என்ற மனப்பான்மை.

பலம் மிகுந்த ''அதிபதிகள்'' பலர் நல்ல ''தலைவர்கள்'' அல்ல;
ஏனெனில் அவர்கள் ஏகாதிபதிகளாயிருந்தனர்.

☐ தன்னையே முன்வைக்கும் தலைவன் தனது பலக்குறைவைவிட பலத்தைக் குறித்தே நினைத்துக்கொண்டிருப்பான் —

யூத மார்க்கத்தில் பிரதான ஆசாரியன்தான் எல்லாருக்கும் மேல்;
ஆனாலும் அவன் தனது பலவீனங்களை
நினைவிற்கொள்ளவேண்டும் — எபி 5:1,2

அப்பொழுதுதான் பிறரை மதித்து அவர்களுக்கு இரங்குவான்.

கடவுள் சர்வ வல்லவர், சர்வ ஞானி, என்றாலும்
அவர் எவரையும் அவமதிப்பதில்லை — யோபு 36:5

☐ அவன் புகழையும் பிரபலத்தையுமே நாடியலைவான்.

மக்களது பாராட்டையும் கைதட்டலையும்
பணிவாய் ஏற்பதில் தவறில்லை.
அதற்கென்றே அலைவதோ தலைவனுக்கு அழகல்ல.

பாராட்டைக் கையாளுவதெப்படியென இயேசு போதித்துள்ளார் —

லூக் 17:10 ... *பயனற்ற பணியாளர் ... கடமை மட்டும் ...*

கதாநாயக வணக்கத்தை அப்போஸ்தலர் கண்டித்தனர் :

1 கொரி 1:12,13 ... *பவுல் ... அப்பொல்லோ ... கேபா ...*
3:21-23 ... *உங்களது ஊழியர்தானே ...*

மனிதப் புகழை நாடியலைவது கடவுளுக்குக் கோபமூட்டும் —
(உ-ம்) ஏரோது மன்னன் (அப் 12:21-23)
... *அவன் கடவுளுக்கு மகிமை செலுத்தாததால் ...*

அதாவது, பாராட்டையெல்லாம் தனக்கே எடுத்துக்கொண்டான்!

**இன்று** ''மகிமை'' தேடாதீர்;
பலனளிக்கும் நாளில் ''மகிமையின் கிரீடம்'' கிடைக்கும்!
1 பேது 5:4

☐ அவன் இறையரசையல்ல, சொந்த சாம்ராஜ்யம் கட்டுவான்.
— Dr. ஐடா ஸ்கடர் அம்மையார் (1870-1959) வேலூரில்
இறையாசியுடன் மருத்துவமனை நிறுவிக்கொண்டிருக்கையில்
தனது சிநேகிதிக்கு எழுதியது:

''நாம் கட்டுவது மருத்துவக் கல்லூரியோ
மருத்துவ மனையோ அல்ல; அது இறையரசு!''

ஆம், குறுகிய நோக்கு அல்ல,
பரந்த தரிசனம் நமக்கிருக்க வேண்டும்.

(உ-ம்) உலகிலுள்ள உங்கள் சபை அல்லது நிறுவனத்தை அல்ல;
உங்கள் சபையை, நிறுவனத்தை ஆண்டவர்
வைத்திருக்கும் உலகைப் பாருங்கள்.

— கடவுளோடு நடப்பதில் சவுலரசன் தடுமாறியபோது, அவன் *"தனக்கு ஒரு நினைவுச் சின்னம்"* நாட்டினான் (1 சாமு 15:12). அதாவது, திருவசனத்திற்கு அவன் கீழ்ப்படியாதபோது.

☐ அவன் உடனாளிகளோடு வெற்றிகளைப் பகிரமாட்டான்.
தலைக்கனம் கொண்டு தனது சாதனைகளிலேயே பெருமையடித்துக்கொண்டிருப்பான்.

— கர்த்தரது சேனையதிபதியான யோசுவாவின் சவால்நிறை எடுத்துக்காட்டு:
யோசு 10:24,25 ... *அமோரியரின் 5 அரசரது கழுத்துகள்மேல் கால்களை வையுங்கள்*

— இக்குணாதிசயம் கிறிஸ்துவில் சங்கமிக்கிறது:
அப்போஸ்தலர்க்கு 12 சிங்காசனங்கள் (லூக் 22:28-30).
அப்போஸ்தலர்க்கு மட்டுமல்ல, வென்று வந்தால் லவோதிக்கேயா சபையினருக்கும் (வெளி 3:21)

■ முடிவாக ஒரு கருத்து:

வரலாற்றைப் படித்தால், தங்களையே உயர்த்தும் தலைவர்கள் ஹிட்லர், ஸ்டாலின் போல முடிவில் பிசாசினால் ஆட்டிப்படைக்கப்படுவர்!
(2 தெச 2:4; வெளி 13:2; யாக் 3:14,15)

## 5. பாரபட்சம் காட்டக்கூடாது.

Do not show partiality.

- தலைமைக்குப் பொருந்தாத பல குணங்களை
  பைபிள் சுட்டிக்காட்டுகிறது; அதில் படுமோசமானது —
  ''பாரபட்சம்''

  - ☐ பல்வேறு கோத்திரத் தலைவர்களிடம் மோசே கூறியது —
    உபா1:16,17 ... பாரபட்சம் கண்டிக்கப்படுகிறது
    (பொறுமையாய்க் கேட்பதின் அவசியம்)
    16:19 ... *லஞ்சம் குருடாக்கித் தாறுமாறாக்கும்*

  - ☐ கடவுள் இஸ்ரவேலருக்குக் கட்டளைகள் கொடுக்கையில்,
    ''அவர்களும்'' ''அந்நியரும்'' சமமாய் நடத்தப்படவேண்டுமென
    அழுத்திக் கூறினார் —
    உபா 24:17,19,20,21 ... திரும்பத் திரும்ப வருகிறது.

    *''அந்நியர், திக்கற்றோர், விதவைகள்,''* இவர்களுக்குத்தான்
    பெரும்பாலும் நியாயம் கிடைக்காது.

  - ☐ சட்டமானது யாவருக்கும் ஒன்றே என்றார் தேவன் —
    எண் 15:15 ... *''தலைமுறை தலைமுறை தோறும்''*

  - ☐ தனது செயல்பாடுகளிலெல்லாம் நியாயமாய்,
    பரிதானமே வாங்காது, இருந்தான் என்பதே சாமுவேலின் சாட்சி —
    1 சாமு 12:2இ,3இ,4 ... *''இளவயது''* முதலே
    அவனில் வளர்ந்த குணம் இது.

    அவனது குமாரரோ இதில் வெகுவாய்த் தவறினர் —
    1 சாமு 8:1,3 ... *பொருளாசை ... கையூட்டு ...*

  - ☐ தாவீதரசனது ஆட்சியின் சுருக்க அறிக்கை —
    2 சாமு 8:15 ... *எல்லா மக்களுக்கும் நீதி, நியாயம் ...*

நெடுங்காலத் தலைமையைத் தொடர்ந்து அவனது இறுதி வார்த்தைகள் — 2 சாமு 23:1அ,3ஆ ... *''நீதிபரர் ... தேவ பயம்''*

ஆம், அனைத்தும் அறியும் கடவுளுக்குப் பயப்படுதலே நம்மைப் பாரபட்சமின்றிக் காக்கும் —

எபே 6:9 ... *''பாரபட்சமே இல்லாத'' உங்கள் தலைவர் விண்ணில் உண்டென்று அறிந்து ...*

திருமறையில் அடிக்கடி குறிப்பிடப்பட்ட தேவனது குணாதிசயம் —

அப் 10:34,35 ... கொர்நேலியுவின் இல்லத்தில் பேதுருவின் பிரசங்க வாக்கியம்

ரோ 3:29,30 ... *புறவினத்தாருக்கும் தேவனவர்!* விருத்தசேதனம் இல்லாவிடினும் ...

ரோ 10:12 ... *யூதனோ ... கிரேக்கனோ எல்லாருக்கும் தயாளர்*

■ பாரபட்சத்தை வெறுமனே ஒரு ''தவறு'' என்று எண்ணாதீர்; கடவுள் பார்வையில் அது பெரிய ''பாவம்'' —

— யாக் 2:1,2-4,9-11 ... *விபச்சாரம், கொலை* போன்றது.

— அது கடவுளுக்குக் கோபமூட்டி நியாயத்தீர்ப்பையும் அழிவையும் கொண்டுவருகிறது.

எசேக் 22:27,30 ... இதற்காகத்தான் *''திறப்பில் நிற்க''* ஒரு மனிதனைத் தேடுகிறார்!

*''எளியவர், தேவையுள்ளோர், அந்நியருக்கு''* நியாயம் கிடைக்கவில்லை.

— ஒரு நகரில் ஊழல் தலைவர்கள் நிறைந்திருந்தால், கடவுள் அதை *''வேசி''* என்றழைக்கிறார் (ஏசா 1:21அ,23); அது மனந்திரும்பினால், அதை *''நீதிபுரம்''* என்கிறார் (வச 26)

— எனவேதான் திருமுழுக்கினன் யோவான் குறிப்பாய் இப்பாவத்திலிருந்து மனந்திரும்ப மக்களை அழைத்தான் ...

லூக் 3:12-15 ... வரிக்காரரிடமும், போர்ச் சேவகரிடமும்: *''லஞ்சம் வாங்காதீர்''*

■ இப்பின்னணியிலேயே, இளந்தலைவன் தீமோத்தேயுவை பாரபட்சத்துடன் எதையும் செய்யலாகாது எனப் பவுல் *''கட்டளையிட்டான்''* — 1 தீமோ 5:21,22

இது தலைவர்களை நியமிப்பது குறித்த காரியம்.
எவ்வளவு கண்டிப்பாய்க் கட்டளையிடுகிறான், பாருங்கள் —
*''தேவனுக்கும் ... கிறிஸ்துவுக்கும் ... தூதருக்கும் முன்பாக''*

சபைகளிலும் பாரபட்சமும் லஞ்சமும் தலைவிரித்தாடுகின்றன —
(உ-ம்) மிஷன் பள்ளிகளில் ஆசிரியர் நியமனம், இடமாற்றம் ...
இனவெறி, ஊர்வெறி, ...

■ சமீபத்திய ஊழல்கள் நமது நாட்டையே உலுக்கிவிட்டன.
எல்லா மட்டத்திலும் சீர்கேடு.
''எல்லாருந்தான் செய்கிறார்களே'' என்று இப்பாவத்தைச் செய்ய மக்கள் துணிந்துவிட்டனர்!

கிறிஸ்தவன் எப்படியிருக்கவேண்டும்?
சங் 26:10 ... *தீச்செயல் ... லஞ்சம் ...*
:11 ... *நானோ உத்தமமாய் நடப்பேன்*

இவ்விதம் தினமும் **ஜெபிப்போம்** — (யோபு 32:21,22)
*''ஆண்டவரே, என்னிடம் பாரபட்சமே வேண்டாம்!''*

■ பாரபட்சம் காணப்படும் இன்னும் சில பகுதிகள் :

☐ குடும்பத் தலைவர்கள் என்ற நிலையில் **பெற்றோர்** தங்கள் பிள்ளைகளுக்கிடையே பாரபட்சம் காட்டக்கூடாது.

அது குழப்பத்திலேயே முடிவடையும்:

— ஆதி 25:28 ... ஏசாவை ஈசாக்கும், யாக்கோபை ரெபெக்காளும் நேசித்தனர்.
ஏசாவுக்கும் யாக்கோபுக்கு இடையே நெடுகவே போராட்டம்.
— ஆதி 37:3,4 ... யாக்கோபு மற்ற குமாரரைவிட யோசேப்பை நேசித்தான். சகோதரர்க்குள்ளே அதனால் பகைமை.

— கிறிஸ்தவப் பெற்றோர்கூட மகன்கள் மகள்களுக்கிடையே பாரபட்சமாய் நடந்துகொள்கின்றனர்.

- ☐ வயதிற்கும் அனுபவத்திற்கும் மதிப்பளிப்பது நியாயம்; ஆனால் வாலிபரையும் இளந்தலைவரையும் அவமதிக்கக்கூடாது:

  — தீமோத்தேயு மதிக்கப்படப் பவுல் ஆசித்தான் (1 கொரி 16:10,11)

  — 30 வயதிலேயே யோசேப்பு எகிப்தின் அதிகாரியாகவில்லையா? ஆதி 41:46

- ☐ ''இந்நபர் எனது மகன் அல்லது மகளாய் இருந்திருந்தால் நான் என்ன செய்வேன்?''என்று தனக்குக்கீழ் பணியாற்றுவோரைக் குறித்துத் தலைவன் கேட்டுக்கொள்ளவேண்டும்.

## ■ முடிவுரை

பாரபட்சத்தை அடியோடு அகற்றுவோம்;
நமது கையில் *''தூக்குநூலை''* எடுப்போம்;
இவ்விதம் இறையுள்ளத்தை இன்பமாக்குவோம் (சக 4:10)

(பார்க்க: பக்கங்கள் 202-205)

## 6. பணத்திற்கு அடிமையாகக்கூடாது.

Do not go after money.

- தலைமைக்குத் தகுதிகள் என்று பவுல் 3 பட்டியல்கள் தந்துள்ளான் —

1 தீமோ 3:1-7

3:8-12

தீத் 1:7-9

இம்மூன்றிலும் *''பண ஆசை''* எச்சரிக்கப்பட்டுள்ளது.

பேதுரு தந்த பட்டியலிலும் அப்படியே —

1 பேது 5:2,3

பணத்தைக் குறித்துத் தலைவனின் மனப்பான்மை எப்படி இருக்கவேண்டுமென்று சரியாய்ப் போதிக்கப்படாததால், ''ஊழியம்'' என்ற பெயரில் ஏராளம் ''வியாபாரம்'' நடக்கிறது.

அது ஊழியமானால், மக்களை ஆசீர்வதிப்பதே குறி;
அது வியாபாரமானால், பணம் சம்பாதிப்பதே குறி.

- கிறிஸ்தவன் எவனும் பணத்தின்பின் ஓடக்கூடாது;
அவன் தலைவனாயிருந்தால், அதை விட்டே ஓடிவிடவேண்டும் —

1 தீமோ 6:10,11 ... *நீயோ,* ***தேவ மனிதனே*** ...

பண ஆசையைவிட்டு ஒரு தலைவன் ''ஓடினால்'' தவிர, மக்களைப் பொருளாசைக்கெதிராய் எச்சரிக்கமுடியாது —

1 தீமோ 6:19 ... **முதலாவது** தீமோத்தேயு *ஓடிவிடவேண்டும்;*
அடுத்து, பிறர்க்குக் *கட்டளையிடவேண்டும்.*

— இப்படித்தான் பொருளாசைக்கு எதிராய்ப் பவுல் அவ்வளவு பேச முடிந்தது —

அப் 20:33 ... *''ஒருவரது வெள்ளியையும் இச்சிக்கவில்லை''*
*''நீங்களே அறிவீர்கள்''* (வச 34)

இது சாதா ''மக்களிடம்'' சொல்லிய சாட்சியல்ல;
''உடன் தலைவர்களோடு'' பேசியதாம்! (வச 17)

இதுவொரு பிரிவுபசார உரை (வச 38)
— தனது பிரிவுபசார உரையில் தீர்க்கன் சாமுவேல் சொன்னது
போன்றது: 1 சாமு 12:2,3

ஊழியத் துவக்கக் காலத்தில் இவ்விதம் சொல்வது எளிது; பின்வரும் ஆண்டுகளிலோ தலைவர் பலர் பண ஆசையில் விழுகின்றனர்.

■ துர்ப்பாக்கியமாக,
பரம தரிசனத்துடன் செயல்படும் திருப்பணியாளரைவிட
பண ஆசைக்குப் பலியானோரே அதிகம் —
பிலி 3:17-21 ... ***அநேகர்*** ... *குடியுரிமை ... சாகவிருக்கும் உடல்*

பவுலின் காலத்தில் மட்டுமல்ல,
சரித்திரத்தில் நெடுகவே இப்படித்தான் —
மீகா 3:11 ... *தலைவர் ... ஆசாரியர் ... தீர்க்கர் ...*
எல்லாம் *''கர்த்தர் பெயரைச் சொல்லி ...''*

அரசியல் தலைவர்; மார்க்கத் தலைவர்; தார்மீகத் தலைவர்.

அவர்களைப் *''பெருவயிற்று நாய்கள்''* எனுமளவிற்கு
அவர்கள் மீது கடவுளது கோபம் — ஏசா 56:11

■ *''மனைவிகளையும் மனைகளையும்''* பெருக்கலாகாது
என்பது அரசர்களுக்குக் கர்த்தரது நியதி —
உபா 17:17
இதில் தேவனது கண்டிப்பைப் பாருங்கள்!

இதனால்தான் சாலொமோனின் ஜெபத்தில் கர்த்தருக்கு அவ்வளவு பிரியம் — அவன் எதைக் **கேட்கவில்லை** என்கிறார் அவர் :
1 இரா 3:10,11... *சுகம்... சொத்து...*

நிகழ்ச்சியோ திட்டமோ, நமது ஜெபங்களெல்லாம் இன்று
பெரும்பாலும் பொருளாதாரத் தேவையை அடுத்தே இருக்கின்றன.

இங்குதான் நித்தியக் கண்ணோட்டத்தை இழக்கிறோம்.
தலைமைத்துவக் கருத்தரங்குகளில் பல பாடங்கள்
விவாதிக்கப்படுகின்றன; பண ஆசையைக் குறித்தோ
பேசுவதில்லையே, ஏன்?

■ இயேசுவின் உள்வட்டக் குழுவில் யூதாஸ் ஒரு தலைவன்.
அவன்தான் பொருளாளர்.
ஆனாலும் அவனது வீழ்ச்சிக்குக் காரணம் ''பண ஆசையே'' —
மத் 26:14-16 ... *எனக்கு என்ன* ***கொடுப்பீர்கள்?***
யூதாசைக் குறித்துப் பேதுருவின் விமர்சனம்:
அப் 1:17 ... *எங்களில் ஒருவன்* ...
:18 ... ***அநீதத்தின்*** *கூலி*
(பணத்திற்காய் இயேசுவை விற்பது இன்று சர்வ சாதாரணம்.)

தலைவன் எவனையும் வீழ்த்தும் மூன்று கண்ணிகளை
உலகம் சுட்டிக்காட்டுகிறது —
பொன் ... பெண் ... புகழ் (gold, girls, glory)
இவற்றில் முதலில் வருவது ''பொன்னாசையே.''
*எல்லாத் தீங்குக்கும் ''வேர்''* (1 தீமோ 6:10)

■ தலைவர்கள், ஊழியர்களுக்கு நடைமுறை ஆலோசனைகள் —

☐ கடவுளுக்கும் மனிதருக்கும் முன் கணக்கொப்புவிப்பு அவசியம்.
2 கொரி 8:20,21

☐ நீங்கள் ஒரு தலைவனும், அதே வேளையில் பிரசங்கியுமானால்,
பணக்காரியங்களைப் பிறரிடம் விட்டுவிடுங்கள் —
அப் 6:3 ... *பந்தி பரிமாறுதல்*
ஆனாலும், ''கேயாசி'' போன்ற உடனாளிகளுக்கு எச்சரிக்கை —
2 இரா 5:20 ... ''தேவ மனிதன்'' எலிசாவின் வேலையாள்

☐ பணத்தின்மேல் கண்வைத்துக்கொண்டு,
பிரசங்கத்தில் தாலாட்டாதீர்கள் —
2 கொரி 2:17 ... *வசனத்தைக் கலப்படம்* ...

மேற்பூச்சான குணமாக்குதலுக்கு எச்சரிக்கை —

எரே 6:13,14 ... *''சமாதானம் ... சமாதானம் ...''*

இவர்களைப் பேதுரு ''கள்ளத் தீர்க்கர், கள்ளப் போதகர்'' என்கிறான் —

2 பேது 2:1,3

☐ கிருபாவரங்களை அப்பியாசிக்க விலை குறிக்காதீர் —

மத் 23:14 ... *விதவைகள் ... பார்வைக்காய் ஜெபம்*

உங்கள் செயல்பாடு எதிலும் காணிக்கை தொகைக்கேற்றவாறு
பாரபட்சம் காட்டாதீர்.
இயேசுவின் உயரிய பாராட்டைப் பெற்ற
ஏழை விதவை போன்றவர்களை நீங்கள் தவறவிடக்கூடும்

(மாற் 12:41-44)

☐ பொதுநலத் திட்டங்களுக்கு,
உங்களுக்குரியதிலிருந்தே தியாகமாய்க் கொடுங்கள் —

(உ-ம்) தாவீது: 1 நாளா 29:3 ... *நான் கொடுத்ததற்கும் மேல்.*
அந்த அளவுக்குத்தான் கொடுப்பதில்
மக்களுக்குச் சவாலிடமுடியும் —
வச 5ஆ,6 ... ***இப்பொழுது*** *மனப்பூர்வமானவன் யார்?*
(உ-ம்) எஸ்றா 2:68,69 ... *தலைவர்கள் ... உற்சாகமாய் ...*

☐ ஆசிகள், லாபங்கள் யாவற்றையும் உங்களுக்கே
வைத்துக்கொள்ளாதீர்; உடன் ஊழியரோடு பகிருங்கள் —

(உ-ம்) தாவீது: 1 சாமு 30:26 ... *மூப்பர் ... சிநேகிதர் ...*

தாக்க முன்சென்றோர்க்கும் தாங்கப் பின்நின்றோர்க்கும்
போரில் கிடைத்ததைச் சமமாய்ப் பங்கிட்டான் (வச 24,25).

## 7. தனிக்காட்டு ராஜாவாயிருக்கக்கூடாது.
Do not be a loner.

- திறமையும் வெற்றியும் நிறைந்த தலைவர்களுக்குத்
  தனித்தே செயல்பட விருப்பமும் சோதனையுமுண்டு.

  ஆனால் இது வேதாகமப் பாணி அல்ல —

  (உ-ம்) தேவனையே எடுத்துக்கொள்வோம் ...

  திருத்துவத்தின் மூவரும்
  சர்வ வல்லமை, சர்வ ஞானம் உடையவர்கள்;
  ஆனாலும் ஒரு குழுவாகவே செயல்படுகின்றனர்:

  — படைப்பு (ஆதி 1:26) ... ***நாம்*** *மனிதனை உண்டாக்குவோம்* ...
  — பாபேல் தகர்ப்பு (ஆதி 11:7) ... ***நாம்*** *கீழே போய்ப் பார்ப்போம்*
  — மிஷனரி அழைப்பு (ஏசா 6:8)... *யார்* **நமது** *காரியமாய்ப் போவான்?*
  — இயேசுவின் வாழ்வு, பணி (யோ 8:29) ... *தனித்திருக்கவில்லை* ...
  — இரட்சிப்பு:
  பிதாவானவர் துவக்கினார் (எபே 1:4)
  குமாரனானவர் நிறைவேற்றினார் (எபே 1:7)
  ஆவியானவர் முத்தரித்தார் (எபே 1:13,14)
  — விசுவாசியின் சிலாக்கியம்:
  (யோ 14:23) ... ***நாங்கள்*** *வந்து தங்குவோம்*
  — இறுதி வெற்றி (முடிவான கட்டம்)
  (அப் 2:34,35) ... *வலது பக்கம் உட்காரும்*

- புதிய ஏற்பாட்டில் தலைமை என்பது பன்மையே —
  (உ-ம்) அப்போஸ்தலர் குழுக்கள்
  பவுல் & பர்னபா / பவுல் & சீலா (அப் 14:14; 15:39,40)
  தீர்க்கர் குழுக்கள்
  யூதா & சீலா (அப் 15:32)

போதகர் குழுக்கள்

அந்தியோகியாவில் ஐவர் (அப் 13:1)

மேய்ப்பர் அல்லது மூப்பர் குழுக்கள்

எபேசு நகரில் (அப் 20:17,28)

மிஷனரி சுவிசேஷகர் குழுக்கள் ( 70 பேர்)

*"இரண்டிரண்டு பேராக ..."* (லூக் 10:1)

- அப்படியானால் ஒரு தலைவன் எதையும் தனித்துச் செய்யவே முடியாது என்று பொருளல்ல —
  - ☐ எரியும் புதர் அனுபவத்தில் **மோசே** தனித்திருந்தான் (யாத் 3:2): தரிசனம் — Vision;

    இஸ்ரவேலரை விடுவிக்கவோ அவன் "இஸ்ரவேலின் மூப்பருடன்" இணைந்து செயல்பட்டான் (வச 16): ஊழியம் — Mission
  - ☐ தலைமை குறித்த பாடங்கள் பழைய ஏற்பாட்டில் பெரும்பாலும் **நெகேமியா** புத்தகத்திலிருந்தே —

    எப்பொழுது தனித்தியங்கவேண்டும், எப்பொழுது இணைந்தியங்கவேண்டுமென்று அவன் அறிந்திருந்தான் —

    முதற்கட்ட ஆய்வில் தனித்து ... (நெகே 2:16)

    பின்னர் தலைவர்களைத் திரட்டினான் (வச 17,18)

    *"நாம் எழுந்து கட்டுவோம், வாருங்கள்!"*
  - ☐ இயேசு தனிமையை நாடிய சமயங்கள் உண்டு; அவற்றைத் தொடர்ந்தோ ஐக்கியப்பட்டார் —

    மத் 14:23 vs. 25 ... *சீடரிடம்*

    மாற் 1:35 vs. 38 ... *அடுத்த ஊர்களுக்கு*

    லூக் 5:16 vs. 17 ... *குழுக்களுக்கு உபதேசிக்க*

- தனித்தே இயங்குவதிலுள்ள ஆபத்துக்கள்:
  - ☐ எல்லாத் தலைவர்க்கும் குருட்டுப் புள்ளிகளும், குறைபாடுகளும் உண்டு. இவை நம்மை ஏமாற்றி அழித்துவிடக்கூடியவை. இங்குதான் உடனாளிகள் நம்மைத் திருத்திச் சமநிலைப்படுத்துவர்.

(உ-ம்) லவோதிக்கேயா சபைத் தலைவர்கள் (வெளி 3:14,17)

- ☐ நீங்கள் தனித்தே இயங்கினால், கணக்கொப்புவிப்பினால் கிடைக்கும் பலமும் பாதுகாப்பும் உங்களுக்கிராது — எளிதில் *விழுந்துவிடுவீர்* (பிர 4:9,10)

தனித்தே இயங்குவோர் செய்ய **''வேண்டியதைச்''** செய்யாது, செய்ய **''விரும்புவதையே''** செய்துகொண்டிருப்பர்!

தலைவர்கள் தவறுவதற்கும் தடம் புரளுவதற்கும் இது ஒரு காரணம். சுய விருப்பங்களின்படியே செயல்பட்டு, எதிலும் நிலைத்திராது போய்விடுவர் — திருத்த யாருமில்லை அல்லவா?

நமது வாழ்வில் கடவுள் தோல்விகளை அனுப்புவதற்கு ஒரு காரணம் நமது சகச்சார்பை அதிகரிக்கவே.

- ☐ தனித்திருப்போர் காலப்போக்கில் பாதகவாதிகளாகிவிடுவர். தரிசனம், சவால், துணிவு, விசுவாசம் யாவும் இழப்பர். ஐக்கியத்தின் **அனல்** இல்லாது குளிர்ந்துபோவர் (பிர 4:11). முடிவில் சுயபரிதாபத்திலேயே மடிவர்.

- ☐ தனித்தியங்கும் தலைவர்கள் அதிகம் சாதிக்கமாட்டார்; அது அவர்களுக்குத் தெரியவும் தெரியாது.
(உ-ம்) யாராவது இவ்வுலகில் தனித்தே ஒரு **''பென்சில்''** செய்யமுடியுமா?
மரம் வெட்டுகிறவன் மரம் கொண்டுவரணும்;
சுரங்கத் தொழிலாளி காரீயம் (graphite) கொண்டுவரணும்;
ரப்பர் தோட்டக்காரன் அழிப்பானுக்கு ரப்பர் கொண்டுவரணும்.

- ☐ தனித்தியங்கும் தலைவர்கள் இக்கட்டுகளைத் தனித்தே சமாளிக்க முயன்று, முடியாது, உடைந்துவிடுவர்.
எப்பொழுதுமே தொழில் நிபுணர்தான் தேவை என்பதல்ல; சாதா மக்களே உங்களுக்கு உதவலாம்.

(உ-ம்) தாவீது (1 சாமு 22:1,2) ... *ஒடுக்கப்பட்டோர் ...*
*கடன்பட்டோர் ... திருப்தியடையாதோர் ...*
காத் ராஜாவுக்குப் பயந்து கெபியில் மறைந்திருந்தபோது!

திடமற்ற சீடரின் துணையை இயேசு கெத்செமனேயில்
நாடவில்லையா? மத் 26:36-38

அடிமட்டத்திலிருக்கும் நபரும்
உயர்மட்டத் தலைவருக்கு உதவ முடியும் —
*''காலைப் பார்த்துத் தலை''* (1 கொரி 12:21ஆ, 22)

■ தலைவன் தனித்தே இயங்கலாகாது என்று சொல்கையில், எப்பொழுதாவது ''தனிமையெனும் சிலுவையை'' ஒவ்வொரு தலைவனும் சுமக்கவேண்டுமென்பதையும் மறக்கக்கூடாது —

☐ நெருங்கிய உடனாளிகளான ஆரோனும் மிரியாமும் அவனுக்கெதிராய் எழுந்தபோது மோசே எவ்வளவாய்த் தனிமையை உணர்ந்திருப்பான் — எண் 12
அதற்கு உடனடிப் பதிலாக அச்சூழலைச்
*''சாந்தமாய்''* ஏற்றுக்கொண்டான் (வச 3)

☐ சிக்லாகு நகரை அமலேக்கியர் தீக்கொளுத்தியபோது தாவீதைத்தான் குற்றம் சாட்டினர் — 1 சாமு 30:3,4,6
அவனைக் கல்லெறிய மக்கள் திட்டமிட்டபோது,
*அவன் கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்தினான்!*

☐ தனிமையெனும் சிலுவையை இயேசு சுமந்தார் —
மத் 26:56ஆ... *சீடரெல்லாரும் விட்டோடினர்*
ஏசா 63:3அ... *''தனியாய் ஆலை மிதித்தேன்!''*

☐ எல்லாரும் பவுலை ஆசியாவில் விட்டுவிலகினர் —
2 தீமோ 1:15
*''எல்லாரும் என்னைக் கைவிட்டனர்''* (4:16)
கசப்போ இல்லை ... *''அவர்கள்மீது குற்றம் வேண்டாம்!''*
கடவுளால் பலப்படுத்தப்பட்டான் (வச 17அ)

■ ஓர் எச்சரிப்பு:

மற்றவர்களிடமிருந்து விலகித் தனிமையாயிருந்துகொண்டு,
''தனிமையெனும் சிலுவையைச் சுமக்கிறேன்''
என்று ஒரு தலைவன் தன்னை ஏமாற்றக்கூடும்!

தனிமையெனும் சிலுவை: பிறர் உங்களை விடுகின்றனர்;
தனிமையாயிருக்க விருப்பம்: நீங்கள் பிறரை விடுகின்றீர்கள்.
கவனம்!

■ S.C. Lowry (1855-1932) என்பவரது பாடல்:

*நண்பரென, சகோதரரென அழைக்கப்பட்டோரே,*
*கிறிஸ்துவுக்குச் சொந்தமென மார்தட்டுவோரே,*
*உம் தலைவர்போல் பிறர் பாரம் சுமப்பீரே,*
*சாந்தமாய், சத்துவமாய், கடமை தவறிடீரே!*

(பார்க்க: பக்கங்கள் 59-61, 303-306, 350-351, 380-384, 517-519, 546-549)

## 8. எரிந்து சாம்பலாகிவிடக்கூடாது.
Do not burn yourself out.

■ எதையும் திறம்படச் செய்யமுடியாத அளவு,
வேலைப்பளு மிகுதியினால், விடாய்த்துப் போய்விடும் நிலை.
இந்நிலை நீடிக்குமானால்,
இது உடலையும் மனதையும் பலவிதக் கேடுகளுக்குள் நடத்தும்.
தலைவர்களுக்கு இது மிகச் சாதாரணம்.

■ எரிந்துபோதலுக்குக் காரணங்களும், நிவாரணங்களும்:

☐ எல்லாவற்றையும் நாமே செய்ய முயன்றால் எரிந்துபோவோம்.
வேலையையும் பொறுப்புகளையும் பகிர்வதில்லை.

— இத்தவற்றைச் செய்து கொண்டிருந்த மோசேயை அவனது
மாமனார் எத்திரோ திருத்தினார்:

யாத் 18:13-23 ... மக்களது தேவைகள், பிரச்னைகள்
:18 ... *"நீர் **தொய்ந்து**போவீர்"*
:23 ... *"அப்பொழுதுதான் உம்மால் **தாங்கக்**கூடும்"*

— ஆதிச்சபையில் முதல் பிரச்னை உருவானதும்
அப்போஸ்தலர் இத்தத்துவத்தின்படி ஞானமாய்ச் செயல்பட்டனர்:

அப் 6:1-6 ... விதவைகளுக்கு உணவு பரிமாறல்
:3 ... ஏழு உதவிக்காரருக்கு இப்பொறுப்பு

☐ அளவுக்கு மிஞ்சி நம்மை இழுப்பதால் எரிந்துபோகிறோம்.

— பிதா தமக்கு நியமித்ததை மட்டுமே இயேசு செய்தார்

யோ 4:34 ... *சித்தம் ... வேலை ...*
"பிதாவின் சித்தமே எனது எல்லை!"

யோ 17:4 ... *செய்து முடித்தேன்!*
முழுவுலகிற்கும் அவர் சென்று சந்திக்கவில்லையே!

— இதுவே அப்போஸ்தலரது பாணியுமாயிருந்தது:

ரோ 12:3 ... *விசுவாச ''அளவு''*

2 கொரி 10:13,14 ... *அளவு ... எல்லை ...*

வேலையில் விறுவிறுப்பும் உற்சாகமும் தேவைதான்;
பேராசையோ நம்மையே கொன்றுவிடும்.

பிரமாண்ட திட்டங்கள் எல்லாருக்கும் தேவ சித்தமாயிராது.
வெகு சிலரை மட்டுமே இவற்றிற்காய்க் கடவுள் தெரிந்தெடுக்கிறார்;
எல்லாரும் செல்லவேண்டிய பொதுவான பாதை இதுவல்ல.

இத்தத்துவத்தை மீறினால், பரசியடிக்கிறவர்களாயிருப்போம்;
''ஆழமாய்'' அல்ல, ''அகலமாகவே'' உழுதுகொண்டிருப்போம்.

— மக்களது தேவைகளால் தாம் ஆளப்படுவதை
இயேசு அனுமதிக்கவில்லை.

மாற் 1:35-38 ... *எல்லாரும் உம்மைத் தேடுகின்றனர் ... அவரோ.*

''இல்லை'' என்று சொல்லப் பழகாவிடில், எரிந்தே போவீர்!

□ அவ்வப்போது ஓய்வெடுத்துப் புதுப்பித்துக்
கொள்ளாததாலும் நாம் எரிந்துபோகிறோம்.
வேலையைச் சற்றும் நிறுத்தாது, இடைவெளியே இல்லாது,
செயல்படுவது இறைச்சித்தமல்ல.

தமது சொந்த முன்மாதிரியைக் கடவுள் வைத்துள்ளாரே —

ஆதி 2:2 ... *கடவுள் ஓய்ந்திருந்தார்*

அவர் களைத்துப்போனார் என்று பொருளா?
இல்லை! ஏசா 40:28 ... *படைப்பாண்டவர் களைப்படைவதில்லை!*
அவர் ''பேசியவுடனேயே'' உலகம் உண்டானதே!
ஓய்வின் அவசியத்தைக் கற்பிக்கவே கடவுள் ஓய்வெடுத்தார் —

யாத் 20:8-11 ... ***ஆகையால்*** *ஓய்ந்திரு!*

எல்லாவற்றிலும் நீண்ட கட்டளை!

ஒரு நாள் ஓய்ந்திருப்பது இன்று ஆசரிப்புக்காக **அல்ல;**
நமது உடலுக்கும் உள்ளத்துக்கும் ஆரோக்கியத்திற்காக!

எனவேதான் இயேசு இப்படிச் சொன்னார் —

*''ஓய்வுநாளுக்காய் மனிதன் அல்ல;*
*மனிதனுக்காய் ஓய்வுநாள்!''* (மாற் 2:27)

10-நாள் வாரமென்று ஜப்பான் முயன்றது, தோற்றது!
''வருடாந்திர'' விடுமுறை போதாது;
''வாரந்தோறும்,'' **அவ்வப்போது,** ஓய்வு தேவை.

(உ-ம்) தாங்கள் எதையெல்லாம் ''போதித்தனர், செய்தனர்''
என்று சீடர் பேசிக்கொண்டிருந்தபோது (மாற் 6:30,31),
*''தனித்து இளைப்பாறுவோம், வாருங்கள்''* என்றார் இயேசு.

சரிவிகித உணவு, கிரமமான உடற்பயிற்சி, போதுமான ஓய்வு,
மருத்துவப் பரிசோதனை, இப்படி உடலைப் பேணுங்கள்.

☐ நேரத்தைச் சரியாய்க் கையாளாவிட்டாலும் எரிந்துபோவோம்.

நேரத்தைக் கையாளுவதைக் குறித்துத் தலைவர்கள்
ஏறெடுக்கக்கூடிய தலைசிறந்த ஜெபம் —
சங் 90:12 ... மோசேயின் ஜெபம் —
*''நாங்கள் ஞான இதயமுள்ளவர்களாகும்படி*
*எங்கள் நாட்களை எண்ணும் அறிவைப் போதித்தருளும்''*

''அறிவும் தகவலும்'' கொண்டு நேரத்தைப் பிரிக்கலாம்;
''ஞானம்'' இருந்தால்தான் அதைச் சரியாய்ச் செலவழிக்கலாம்!

வாழ்வு குறுகியதென்றறிந்து, அதற்குள்
நாம் செய்ய தேவன் விரும்புவதை அறிவதே மெஞ்ஞானம் —
எபே 5:15-17 ... *காலத்தைப் பயன்படுத்தி ... ஞானம் ... கர்த்தரின் சித்தம்.*

''நேரமேயில்லை'' என்று எப்போதும் புலம்புவோம்.
நேரம் குறைவுதான், ஆனால் போதும்!
இதுதான் இயேசுவின் கேள்விக்குப் பொருள் —
யோ 11:9அ ... *பகலுக்குப் 12 மணிநேரம் இல்லையா?*

ஒரு கணக்கு போடுவோம் —

(10 மணி நேரம்: வேலை + பயணம்) x 6 நாட்கள் = 60 மணி நேரம்
(3 மணி நேரம்: சாப்பாடு + உரையாடல்) x 7 நாட்கள் = 21 மணி நேரம்
(8 மணி நேரம்: தூக்கம்) x 7 நாட்கள் = 56 மணி நேரம்
137 மணி நேரம்

ஒரு வாரத்தில் கடவுள் கொடுத்துள்ள நேரம்: 24 x 7 = 168 மணிநேரம்
மீதமிருப்பது: 168-137 = 31 மணி நேரம்
இதைப் பயன்படுத்தும் விதம்தான் நமது வாழ்வைத் தரமாக்கும்!

**அவசியமானவைகளை** வரிசைப்படுத்தாமல்
நேரத்தைச் சரிவரக் கையாள முடியாது —

→ எது முக்கியம், எது அத்தியாவசியம் என வேறுபடுத்தக் கற்றுக்கொள்ளுங்கள்.
→ ''நல்லது, தீயது'' அல்ல, ''நல்லது, சிறந்தது'' என்பதில் தெரிந்தெடுங்கள்.
→ சில காரியங்களுக்கு ''இல்லை'' என்று சொல்லப் பழகுங்கள்.
→ ''நான்தானா, வேறெவரும் இதைச் செய்யமுடியாதா?'' எனக் கேளுங்கள்.

''இப்பொழுதே இதைச் செய்தாகவேண்டுமா,
அல்லது வேறெதுவும் இப்பொழுது முக்கியமா?''

■ ஓர் எச்சரிப்பு:

எரிந்துபோயிருக்கையில் சத்துரு எளிதில் உங்களைத் தாக்கமுடியும்!
தாவீது — 2 சாமு 3:1 ... *வர வர பலமடைந்தான்*
(இறுதி வசனம்) :39 ... *''நான் பலவீனன்''*
தாவீது ''விடாய்த்து, தளர்ந்திருந்த'' வேளையிலேயே
அவனைத் தாக்க அகித்தோப்பேல் திட்டமிட்டான் (2 சாமு 17:1,2)

■ இறைவாக்குகள்:

☐ *பாரம் சுமப்போரே, என்னிடம் வாருங்கள் ...*
*இளைப்பாறுதல் தருவேன்!* மத் 11:28-30
☐ *மங்கியெரியும் திரியை அணையார், தீண்டிவிடுவார்!* ஏசா 42:3

## 9. சொந்த வாழ்வைக் கவனியாதுவிடக்கூடாது.
Do not neglect your personal life.

- பொதுவாகவே தலைவர்களுக்கு வேலையும் பளுவும் அதிகம். சொந்தத் தேவைகளைக் கவனிப்பதற்கு அவர்களுக்குப் போதிய நேரம் கிடைப்பதில்லை.
  இவ்விதத் தலைவர்களது பணிக்காலம், வாழ்வுக்காலத்தின் முடிவு புலம்பல்தான்.
  தலைவர்கள் சொந்த வாழ்வைக் கவனிப்பதவசியமென்று விளக்கும் மூன்று படங்கள் பைபிளில் உண்டு —
  - ☐ விவசாயி / தோட்டக்காரன் (உன் 1:6ஆ)
    ... *என் சொந்தத் தோட்டத்தையோ* ...
  - ☐ வைத்தியன் (லூக் 4:23) ... இயேசு சொன்ன முதுமொழி:
    *''வைத்தியனே ... உன்னையே குணமாக்கு!''*
  - ☐ போதகன் (ரோ 2:21அ)
    *''உனக்கே போதியாதிருக்கலாமா?''*
- 30 ஆண்டுகளுக்குமேல் தலைமைப் பொறுப்பில் ஆண்டவரால் பயன்படுத்தப்பட்டவன் என்ற வகையில், ஆரோக்கியமாய்ச் சொந்த வாழ்வைக் காத்துக்கொள்ள நான் தரும் சில நடைமுறை ஆலோசனைகள் —

### அ) திருமறையுடன் போதுமான நேரம் செலவிடுங்கள்.

— முற்காலங்களில் மன்னர்களுக்குக் கட்டளையிடப்பட்டது :
உபா 17:20 ... *தனக்கென்று ஒரு பிரதியை எழுதி* ...

— திருமறையே ஆவியின் பட்டயம்.
*''கர்த்தரது பட்டயமே* என் பட்டயம்'' என்று சொல்லக்கூடிய அளவு தலைவனானவன் திருவசனத்தில் ஊறியிருக்கவேண்டும்.

(உ-ம்) நியா 7:18 ... *கர்த்தரின் பட்டயம் கிதியோனின் பட்டயம்!*

(மீதியானியோருக்கெதிராய்ப் பாளையம்)

☐ போதனை மற்றும் எடுத்துக்காட்டுகள் மூலம் தலைமைத்துவப் பாடங்களைத் திருமறை கற்பிக்கிறது —

(உ-ம்) மோசே, யோசுவா
நீதித் தலைவர்கள்
அரசர்கள்
ஆசாரியர், தீர்க்கர்
சீர்திருத்தவாதிகள்
இயேசுவானவர்
அப்போஸ்தலர்

நடைமுறை ஞானம் பெற அடிக்கடி நீதிமொழிகள் வாசியுங்கள்.
சபைப் பிதாக்கள், எழுப்புதல் வீரர்களது சரிதைகளையும் வாசியுங்கள்.
தரமான நூல்கள் நிறைய வாசியுங்கள் —

(உ-ம்) ஜான் வெஸ்லி தினமும் 50முதல் 90மைல் குதிரையில் சவாரி செய்வாராம். அதுதான் அவர் வாசிக்கும் நேரமாம்.
மெதடிஸ்டு போதகர்க்கு அவர் சொன்னது:
''வாசியுங்கள், இல்லையேல் ஊழியத்தை விட்டு விலகுங்கள்!''

☐ செய்தித்தாள்களைத் தவறாது வாசியுங்கள் —

*''காலா காலங்களைச் சரிவரப் புரிந்தவர்களே''*

தாவீதை ராஜாவாக்கினர் — 1 நாளா 12:32,38

இயேசுவை அனைவர் இதயங்களிலும் ராஜாவாக்குவதே

தலைவரது ''முடிவான நோக்காய்'' இருக்கவேண்டும்!

உலகின் உயர் பதவிகளுக்கு
பைபிள்மேல் வாக்குறுதி எடுப்பதில் ஆச்சரியமில்லையே!

## ஆ) கடவுளது முகத்தை எப்பொழுதும் தேடுங்கள்.

தலைவனெவனும் ஜெப மனிதனாயிருக்கவேண்டும்.
அவன் கடவுளோடு தனித்திருக்கும் நேரத்தைத் தவறவிடக்கூடாது.

— மோசேயும் ஆரோனும் (லேவி 9:23)

முதலாவது மகிபன்முன்; அடுத்துதான் மக்கள்முன்

ராஜாவாயிருக்கவேண்டுமானால், ஆசாரியனாகவுமிருக்கவேண்டும் —

*''ராஜரீக'' ஆசாரியக் கூட்டம்* (1 பேது 2:9; யாத் 19:5,6)

அதாவது, ''ஆசாரியத்துவமும் ராஜரீகமும்'' பின்னிப்பிணைந்தவை:

முதலாவது, மக்களுக்காய்க் கடவுளிடம் பேசுங்கள் (ஆசாரியன்)

அடுத்து, கடவுளுக்காய் மக்களிடம் பேசுங்கள் (இராஜா)

— பகுத்தறியும் ஆவிக்காய் சாலொமோனைப்போல வேண்டுங்கள் (1 இரா 3:5-13)

கடவுளின் முகத்தைத் தேடாத தலைவன்
நாளடைவில் மழுங்கிப்போவான் — (எரே 10:21)

*...மேய்ப்பர் ... மிருகக்குணம் ... கர்த்தரைத் தேடாமல் ...*

— கவர்னரான பின்னரும் தானியேல் கடவுளுக்குமுன்
முழங்காலிடத் தயங்கவில்லை (தானி 6:3,10)

கடவுள்முன் விழுந்து கிடக்கிறவன் மனிதர்முன் நிமிர்ந்து நிற்பான்;
அப்படி விழுந்து கிடக்காதவன் மனிதர்முன் வீழ்வான்!

பிறரை ''நடத்த'' வேண்டிய நான் ஆவியினால் ''நடத்தப்பட'' வேண்டும்! (ஜெபப் பாடல்: பக்கம் 664)

— ஒவ்வொரு கடினமான சூழலிலும் *மோசே கர்த்தரிடம் திரும்பினான்*—

யாத் 5:22 ... மக்கள்மீது பார்வோன் கொடூரமானபோது...

15:25 ... மாராவின் தண்ணீரைக் குடிக்கமுடியாதபோது...

தேவனோடு மோசே நெருங்கிய ''நட்புறவு'' கொண்டிருந்தான்
யாத் 33:11அ

இவ்வித ஐக்கியமே தலைவனை வெற்றிபெறச் செய்கிறது.
கடவுளுக்குக் காத்திருக்கும்போதெல்லாம் அவனுக்குப்
புது அபிஷேகம் —

- ☐ *ஆனந்த தைலம்* (சங் 45:7) x அழுத்தம்
- ☐ *பரிசுத்த தைலம்* (சங் 89:20) x அவபக்தி
- ☐ *புது எண்ணெய்* (சங் 92:10) x அசதி

**இ) அடிக்கடி தற்பரிசோதனை செய்துகொள்ளுங்கள்.**

இப்பயிற்சியில் கிரமமாய் இராவிடில் அழுக்கும் குப்பையும் ஆன்மாவில் குவியும்.

நல்லதை விரும்பி தீயதை வெறுக்கும் தலைவனே
பிறரிலும் சிறந்து விளங்குவான் —

சங் 45:6,7 ... *தோழரைவிட ... அபிஷேகம் ...*
உபா 28:14 ... *கீழ்ப்படிந்தால் வாலாகாமல் தலையாவாய்*

தலைமைக்கு இன்றியமையாத தகுதி நல்லதோர் ''இதயமே''—

1 சாமு 13:14 ... *சவுல் புறக்கணிப்பு ... தாவீது தெரிவு ...*
அப் 13:22 ... *''இறைவனது இதயத்திற்கு இதமானவன்''*

தலைவன் தனது உள்ளத்தில் ''உண்மை'' இழந்தால்,
**மாய்மாலத்துடன்** செயல்படுவான் —

மாய்மாலக்காரன் ஆளக்கூடாது (யோபு 34:29,30).
மாய்மாலத்திற்காகவே தமது காலத்து மார்க்கத்தலைவரை இயேசு கண்டித்தார் — மத் 23:13-33 ... (7 ஐயோக்கள்)

கடவுளின் அதிகாரத்திற்குத் தலைவன் கீழ்ப்படிந்திருந்தால்தான்
பிறர்மீது அவன் அதிகாரம் செலுத்தமுடியும் —

(உ-ம்) இயேசு (மத் 17:5) ...*''அவரில் பிரியம் ...
அவருக்குச் செவிகொடுங்கள்!''*

ஓர் ஆங்கிலேயத் தளபதியைக் குறித்து இவ்விதம் சொல்லப்பட்டது—
''கடவுளுக்கே பயந்ததால் மனிதருக்குப் பயப்படவேயில்லை!''

**ஈ) குடும்பத்தை நன்கு கவனியுங்கள்.**

குடும்பத்தோடு, அதுவும் குழந்தைகளோடு,
தரமான நேரம் செலவழிக்கத் தவறும் தலைவன் பலமிழப்பான்.

*கடவுளது வழிகளைப் பிள்ளைகளுக்குப் ''போதிப்பான்''* என்பதே
கடவுளுக்கு ஆபிரகாம் மீதிருந்த பெரிய நம்பிக்கை (ஆதி 18:19)

வீட்டில் நல்ல தந்தையாயிருந்த அவன் அனைத்து
விசுவாசிகளுக்கும் தந்தையானான் (ரோ 4:16; யாக் 2:21)

இதையே அப்போஸ்தலன் பவுலும் வலியுறுத்தினான் —

1 தீமோ 3:4,5 ... *குடும்பம் ... பிள்ளைகள் ... சபை...*

**உ) குற்றச்சாட்டுகளைப் பொருள்சார்ந்து நோக்குங்கள்.**

நீதி 27:5,6 ... *கடிந்துகொள்ளல் ... அடிகள் ... முத்தங்கள்*
காரியங்களைச் சரிசெய்யுங்கள்.
தவறுகளிலிருந்து கற்றுக்கொள்ளுங்கள்.

கடவுளுக்கும் மனிதருக்கும் முன்பாகத் தானியேல்
நல்மனச்சாட்சியைக் காத்துக்கொண்டதால்,
சதிகாரரைப்பற்றிக் கவலைப்படவேயில்லை — தானி 6:22

■ **கூடுதல் குறிப்புகள்**

☐ துன்பத்திலும் எதிர்ப்பிலும் தலைவனைத் தைரியமாய்க் காப்பது இறைப்பிரசன்னமே —
யோசு 1:17,18

☐ தலைவன் சொல்லவேண்டியது: *"நான் செய்வதுபோல் செய்யுங்கள்!"*
கிதியோன் (நியா 7:17,18)
பவுல் (பிலி 3:17; 4:9)

☐ *தாவீதின் நேர்மையே மக்களின் அடிபணிதலுக்குக் காரணம்*
சங் 18:20-24,43-47

☐ *"இதயம்... உண்மை... கரங்கள் ... திறமை"* (வரிசையைக் கவனிக்க)
சங் 78:70-72

☐ *"இறைவனின் இதயத்திற்கேற்ற இடையர்"*
எரே 3:15

☐ தீர்க்கத்தரிசனத் தலைவரிடமே கடவுளது இரகசியங்கள் உண்டு
ஆமோஸ் 3:7
ஓசி 12:13

☐ மாய்மாலமின்மை: அரசன் எசேக்கியா
2 நாளா 31:20,21

☐ *தாவீது கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்திக்கொண்டான்*

எப்படி? சங் 42:11

☐ பிறரை அடிக்குமுன் அவர்களுக்காய் அழுங்கள் —

எரேமியா (எரே 13:17; 9:1)

இயேசு (லூக் 19:41,45)

☐ விட்டுவிடலாம் என்ற சோதனைக்குத் தலைவன் தப்புவது இறைப்பிரசன்னத்திற்குள் நுழைவதாலேயே —

சங் 73:14-17, 22-24

☐ தலைவனது பதவி சவாலிடப்படும்போதுதான் அவனது தாழ்மை தெரியும் — எண் 12:3

☐ கடிந்துகொள்ளுதலுக்கு மறுமொழி:

நாத்தானின் கடிந்துகொள்ளுதலுக்குத் தாவீது — சரி

யோவானின் கடிந்துகொள்ளுதலுக்கு ஏரோது — தவறு

☐ பிறரை ஆளுமுன் உங்களையே ஆளுங்கள் (நீதி 16:32)

☐ *"அடக்கி ஆளாமல்"* ... *"முன்மாதிரிகளாய்..."* (1 பேது 5:3)

(பார்க்க: பக்கங்கள் 68-70, 385-388, 691-695, 735-737)

## 10. அடுத்த வரிசையினர் ஆயத்தம் தாமதமாகக்கூடாது.

Do not delay preparing nextliners.

- ''பிறரைத் தலைமைக்குப் பழக்காது தலைமையில் இருப்பவன் தலைவனல்ல!''

  ''பின்னமர்வர் இல்லையேல் பின்னடைவுதான்!''

  "Without a successor there's no success!"

- அடுத்த வரிசையினரை ஆயத்தப்படுத்தியோர் பலருண்டு;
  அவர்களிலெல்லாம் தலைசிறந்தவர் இயேசுவே —
  இயேசுவுக்குப் பல வட்டங்களில் உடனாளிகள் இருந்தனர் —
  பரந்த வெளிவட்டம்: திரளான சீடர்
  குறுகிய வெளிவட்டம்: 70 சீடர்
  உள்வட்டம்: 12 சீடர் (அப்போஸ்தலர்)
  நெருங்கிய உள்வட்டம்: 3 சீடர் (பேதுரு, யாக்கோபு, யோவான்)

  இம்மூவரோடு நிறைய நேரம் செலவிட்டார் —
  (உ-ம்) மறுரூப மலை, கெத்செமனே தோட்டம்
  இவர்களே திருச்சபைக்குத் *''தூண்கள்''* ஆயினர் (கலா 2:9)
  தமது ஊழியத் துவக்கத்திலேயே இயேசு இவர்களைச்
  சேர்த்துக்கொண்டார் (மத் 4:17-22)
  அவர்களுக்குள்ளும், ''சமமானவர்களில் முதல்வனைக்''
  கண்டுபிடித்தார்! — பேதுரு
  — 4 சுவிசேஷங்களின் பட்டியலிலும் பேதுருவே முதலாவது
  குறிப்பாக மத் 10:2 ... *''முந்தினவன் பேதுரு!''*
  — விண்ணரசின் சாவிகளை பேதுருவிடமே ஒப்படைத்தார் (மத் 16:19)
  — *''சகோதரரைத் திடப்படுத்து''* என்று அவனையே பணித்தார்.
  அதாவது மற்ற சீடரை ... (லூக் 22:32)

— பேதுருவிடமே இப்படிச் சொன்னார் :

*"என் ஆட்டுக்குட்டிகளை ... ஆடுகளை மேய்த்திடு"*

தமது சீடரின் குறைபாடுகளில் இயேசு பொறுமையாய் இருந்திராவிடில் அவர்களை வளர்த்திருக்கமுடியாது.

இறுதிக்கட்டத்தில்கூட அவர்கள் நிறைவடையவில்லை —

☐ *அவர்கள் நம்பவில்லை* (மாற் 16:10-14)
மும்முறை சொல்லப்பட்டுள்ளது! (மரியாள் ... 2 சீடர்...)
ஆனாலும், *"உலகெங்கும் செல்லுங்கள்"* என்றார்! (வச 15)

☐ பிறர் விவகாரங்களில் தலையிடும் பழக்கம் அவர்களுக்கிருந்தது —
யோ 21:21,22 ... யோவானைக் குறித்துப் பேதுரு ...

☐ அகிலவுலக நற்செய்திப்பணி குறித்து இயேசு பேசுகையில், அவர்களோ நாட்டின் விடுதலை குறித்து வினவினார்கள் —
அப் 1:6,7

எனவே பொறுப்பெடுக்குமளவிற்கு அடுத்த வரிசையினர் வளரவில்லையென்று எத்தலைவனும் தாமதிக்கக்கூடாது.

■ நம்பிக் கொடுக்கும்போதுதான் மக்கள் வளருவர்.
— சீமோன் பேதுரு
நாணலான *"சீமோன்"* பாறையான *"பேதுரு"* ஆனான்.

— அப்போஸ்தலன் யோவான்
இயேசுவின் சிம்மாசனத்தினருகே ஒரு நாள் ஆசனம் கேட்டவன் —
பின்னர் இயேசுவின் *பாடுகளுக்குப் பங்காளியானான்* (வெளி 1:9)

■ அடுத்த வரிசையினரை ஆயத்தப்படுத்தும் வகையில், இயேசு அவர்களுக்காய் அதிகம் **ஜெபித்தார்** —
(உ-ம்) யோ 17... இவ்வேண்டல் **முழுவதும்** அப்போஸ்தலருக்காகவே
வச 6, 8, 9, 12, 13, 17, 18, ...

நீண்ட இந்த ஜெபத்திற்குப் பின்னர்தான் *''தமது சீடருடன்''*
கெத்சமெனே தோட்டத்திற்குள் சென்றார் (யோ 18:1)

இந்திய மிஷனரிச் சங்கம் (IMS), தேசிய மிஷனரிச் சங்கம் (NMS)
ஆகியவற்றின் நிறுவனரான பேராயர் அசரியா அவர்கள்
பெயர் பெயராய்த் தனது உடன் தலைவர்களுக்காய்த் தினமும்
30 ஆண்டுகளாய் ஜெபித்தாராம்!

- வாக்குப்பண்ணிய நாட்டைப் ''பார்ப்பாய்,'' அதில் ''நுழையாய்''
என்று மோசேயிடம் கடவுள் சொன்னதும், அவன் செய்த
முதல் காரியம் அடுத்த தலைவனுக்காய் வேண்டியதே—

எண் 27:12-14 ... கடவுளது தீர்ப்பு
:15-17...மோசேயின் ஜெபம்... *''மேய்க்க ஒருவன்''*
:18-20...யோசுவாவைக் கடவுள் தெரிந்தெடுக்கிறார்

தனது ''பணி ஓய்வை'' மோசே பண்பாய் ஏற்றான் —
உபா 31:2 ... *நான் வயதுசென்றவன் ... கடவுளும் சொன்னார்*

- அடுத்த வரிசைத் தலைமை குறித்து யோசிப்பதை
ஒரு பேரிடர் வரும்வரைத் தள்ளிப்போடாதீர்

— துவக்கத்திலேயே யோசுவாவை **மோசே** தனக்கு உதவியாளனாய்த்
தெரிந்துவிட்டான் (யாத் 24:13)
கானானுக்குள் நுழையமாட்டான் என்று கடவுள் அவனிடம்
சொன்ன **பின்னர்** அல்ல!

— எலிசாவைத் தனக்கடுத்த தீர்க்கனாய் நியமிக்க எலியா
எடுத்துக்கொள்ளப்படும்வரை காத்திருக்கவில்லை —

வெகுமுன்னரே *அவன்மீது சால்வையைப்* ***போட்டான்***
1 இரா 19:19

எடுத்துக்கொள்ளப்பட்டபின், சால்வை எலிசாவினால்
***''எடுக்கப்பட்டது''*** (2 இரா 2:13)

— நெடுங்காலமாய்த் தீமோத்தேயுவையும் தீத்துவையும்
பவுல் பயிற்றுவித்துவந்தான் (அப் 16:1-3; கலா 2:1)

— எனது சொந்த சாட்சி:

1996இல், 50 வயதில், திடீரென எனக்கு இருதய நோய் கண்டுபிடிக்கப்பட்டது. இக்கட்டான அறுவை சிகிச்சைக்கு முந்திய நாள் நான் பதறவில்லை, எனது உடனாளிகள் என்னைச் சந்திக்க வந்தபோது நான் சொல்லவேண்டிய முக்கிய காரியங்கள் என்று எதுவுமில்லை.

■ அடுத்த வரிசையினரைத் தெரிந்தெடுக்கையில் இவைகளால் ஆட்கொள்ளப்படாதீர் —

☐ இனவெறி, ஊர் வெறி (Casteism / Regionalism)

பவுல் சுத்த யூதன் (பிலி 3:5),
தீமோத்தேயுவோ பாதி யூதன்தான் (அப் 16:1),
தீத்துவும் யூதனே அல்ல, கிரேக்கன் (கலா 2:3)

☐ உறவினருக்குச் சலுகை (Nepotism)

வம்சாவழித் தலைமை கிறிஸ்தவத்திற்கு ஏற்றதல்ல.
பழைய ஏற்பாட்டில் தீய மாதிரிகள் ஏராளம் —

ஆசாரியன் ஏலியும் பொல்லாத குமாரரும்.
தீர்க்கன் சாமுவேலும் கெட்ட குமாரரும்.
எத்தனையோ ராஜாக்கள்.

விதிவிலக்குகள் இருக்கலாம்; ஆனால் தலைவனானவன் இதில் இறைச்சிந்தையை அறிய அவர்முன் காத்திருக்கவேண்டும்.

''கட்டையை'' அடுத்தவரிடம் எளிதில் கொடுத்துவிடலாம்;
''சால்வையோ'' மேலிருந்தல்லவா விழவேண்டும்? (2 இரா 2:10)
(baton vs. mantle)

■ தலைவனாய் நீங்கள் விறுவிறுப்பாய்ச் செயல்படும்போதே, சில முக்கிய வேலைகளை உடனாளிகளிடம் விட்டுவிடுங்கள்.

— யெகூவை ராஜாவாய் அபிஷேகம்பண்ணும் வேலையை எலிசா தனது பயிற்சியர் ஒருவனிடம் விட்டுவிட்டான்
2 இரா 9:1,4 ... *''தீர்க்கரது புத்திரன் ... வேலைக்காரன்''*

— ஞானஸ்நானம் கொடுக்கும் வேலையைச் சீடரிடம் இயேசு விட்டார்

யோ 4:3 ... *இயேசு தாமே ஞானஸ்நானம் கொடுக்கவில்லை*

— கிரேத்தாவில் ஒழுங்குபடுத்த தீத்துவைப் பவுல் விட்டான் — *''மேய்ப்பர்களை''* (மூப்பர்கள்) நியமிப்பதும் சேர்த்து —

தீத் 1:5

■ திறமையும் வரமும் பெற்ற உடனாளிகள் வளர்ந்துவருவதால் அச்சமடையாதீர்.

இயேசு: *''என்னிலும் பெரிய செயல்கள்!''* (யோ 14:12)

மன இறுக்கம் தளரட்டும்!
நமக்கென்று கடவுள் நியமிக்காத இடத்திற்கு எவரும் நம்மைத் தூக்கவும் முடியாது; நியமித்த இடத்திலிருந்து இறக்கவும் முடியாது!

தலைவனென்றால் பிறர்க்கு ஏணியாயிருக்கவேண்டும்.
A leader should be a ladder for others.

■ அடுத்த வரிசையினரைப் பழக்குவிப்பதில் 4 நிலைகள்:

| | |
|---|---|
| 1. நான் செய்கிறேன்; நீ கவனி. | I do; you watch. |
| 2. நான் செய்கிறேன்; நீ உதவு. | I do; you help. |
| 3. நீ செய்; நான் உதவுகிறேன். | You do; I help. |
| 4. நீ செய்; நான் கவனிக்கிறேன். | You do; I watch. |

■ **முடிவுரை**

நீங்கள் முன் நடத்துபவரோ, பின் செல்லுபவரோ,
அவபக்தியை மேற்கொண்டு, உத்தமமாய் வாழ்ந்தால்,
இயேசு தமது தந்தையுடன் அரியணையமர்ந்ததுபோல,
நீங்களும் இயேசுவுடன் அரியணையமர்வீர்கள்!

வெளி 3:21

(கூடுதல் குறிப்புகள் அடுத்த பக்கம்)

- ■ **கூடுதல் குறிப்புகள்**

☐ முந்திய தலைவனைக் குறைசொல்லாதீர் (யோசு 22:1-6)

தீயவை இருக்கலாம்;
நல்லதைப் பாராட்டுங்களேன்!
கிதியோன் மட்டுமல்ல, சிம்சோனுக்கும்
எபிரேயர் 11இல் பாராட்டு (வச 32)

☐ தலைமைத்துவம் பற்றித் தெரியாதோர்—

ஏதோ படிப்பை வைத்து எவரையும் தலைவராக்கிவிடாதீர்.
1 தீமோ 3:6; பிர 10:16

☐ பின்செல்வோர் ஒவ்வொருவரது பூரணமே ஆன்மீகச் சிந்தையுள்ள தலைவனின் தணியா தாகமாயிருக்கவேண்டும்.
கொலோ 1:28,29

☐ தாவீதின் 37 வீரர்கள் (2 சாமு 23:8-39).

யோவாப் திறமைசாலிதான், ஆனால் நம்பத் தகுந்தவனல்ல;
அவன் தாவீதின் சேனையதிபதியாயிருந்தாலும்
தாவீது இப்பட்டியலில் அவனைச் சேர்க்கவில்லை.

☐ பன்னிருவரைத் தெரிந்தெடுக்குமுன் முந்திய இரவை
இயேசு ஜெபத்தில் கழித்தார் (லூக் 6:12,13)

☐ தாவீதை ஓர் அச்சுறுத்தலாகவே சவுல் பார்த்தான்

1 சாமு 18:5-9; 2 சாமு 5:1,2

☐ *''நான் போவது உங்களுக்குத்தான் நலம்''* — இயேசு (யோ 16:7)

உடலால் ஒதுங்கியிருத்தலும் சிலவேளை உதவும்.

☐ ஆடுகளை ஆயர்களாக்குபவனே நல்லாயன்.

ஒவ்வொரு விசுவாசியையும் ஊழியனாய் வளர்ப்பதே
ஒவ்வொரு ஊழியனின் ஊழியமாகும் —
எபே 4:11-13

- ☐ இறைமக்களின் நலனுக்காய் எஸ்தரை ராணியாய்
  மொர்தெகாய் உருவாக்கினான் (எஸ்தர் புத்தகம்)

- ☐ தலைவர்கள்: பிறப்பா உருவேற்பா? Born or made?
  இரண்டுந்தான்: பிறப்பு — கடவுளது முன்குறிப்பு
  உருவேற்பு — பயிற்சி, மேம்பாடு

- ☐ குழு அங்கத்தினரின் வெற்றிகளில் மகிழுங்கள்
  லூக் 10:17-21

- ☐ அடுத்த வரிசையினர் முதலாம் தலைவர்களைப் பின்பற்றுவதுடன், கர்த்தரோடும் நேரடியாய் இணைக்கப்படவேண்டும்
  1 தெச 1:5,6

- ☐ அனுபவம் வேறு, முதிர்ச்சி வேறு.

- ☐ அடுத்த வரிசையினருக்குக் கட்டாயம் விளக்கவேண்டியது:
  ''நாம் செய்வதைச் செய்வதேன்?''
  "Why we do what we do?"